# தமிழரசு

16-9-1990 ரூ.1





சென்னையில் 26.8.90 அன்று நடைபெற்ற திரு.வி.க. பிறந்தநாள் விழாவின்போது- மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், புலவர் கா. கோவிந்தன் அவர்களுக்கும் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்களுக்கும் திரு.வி.க. விருது வழங்கிச் சிறப்பித்தார். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் உடன் உள்ளார்.



# இந்த இதழில்...


| | |
|---|---|
| முப்பால் தந்த வள்ளுவருக்கு முக்கடல் சங்கமத்தில் உருவச்சிலை ... | 2 |
| திரு.வி.க. விருது வழங்கும் விழா ... | 4 |
| அண்ணா ஒரு மாலைமணி ... | 6 |
| ஈரோட்டண்ணல் (கவிதை) ... | 9 |
| நெஞ்சம் மறக்குமோ? ... | 10 |
| அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள் ... | 13 |
| ஒன்றா இரண்டா, எடுத்துச் சொல்ல? ... | 14 |
| மாவட்டச் செய்திகள் ... | 17 |
| ஆனைமலைக் காடர்கள் ... | 24 |
| பார் உய்யப் பாடிய பாவேந்தர் ... | 28 |
| வேளாண்மை ... | 30 |
| ஆசிரியர் பெருமை (கவிதை) ... | 33 |
| அள்ளக் குறையாதது கல்விச் செல்வம் ... | 34 |
| பண்பாட்டுப் பெட்டகம் ... | 45 |



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2021
ஆவணித் திங்கள் - 31
மலர்: 21 இதழ்: 6
16-9-1990




## பெரியார் — அண்ணா சந்திப்பு



பெரியார் நிமிர்ந்து பார்த்தார். தமக்கு முன் வந்து நின்ற இளைஞனின் எழுச்சியையும் ஏதோ சொல்லத் துடிக்கும் ஆர்வத்தையும் கண்டு கொண்டார்.

"தம்பி, உன் பேரென்ன?"

"அண்ணாதுரை."

"என்ன செஞ்சிக்கிட்டிருக்கே?"

கல்லூரியில் படிக்கிறேன்; பரீட்சை எழுதியிருக்கேன்."

படிப்பு முடிஞ்சதும் உத்தியோகம் பார்க்கப்போறியா?"

ஆமாம், அதுக்குத்தான் படிக்க வச்சிருக்காங்க. வேறு எதுக்காகப் படிக்கிறதுங்க?" என்று அண்ணா திரும்பித் தம்மைக் கேட்பார் எனப் பெரியார் எதிர்பார்த்தார். ஆனால், பதில் வேறுவிதமாக வந்தது. "உத்தியோகம் பார்க்க விருப்பமில்லே!"

பதில் கேட்டுப் பெரியார் பிரமித்தார். விழிகளில் வியப்புப் படர, பார்வையில் புதுமை மலர, இளைஞர் அண்ணாவை அன்போடு நோக்கினார். "இந்த நாளில் இப்படி ஓர் இளைஞனா? படிப்பது உத்தியோகம் பார்ப்பதற்காக அல்ல என்று ஆணித்தரமாக அறிவிக்கிறானே? தெளிவாகத் தெரிவிக்கிறானே?"

அண்ணாவின் பேச்சும், துடிப்பும் குரலும் கேள்விக்குத் தங்கு தடையின்றி வருகிற பதிலும் பெரியாரை மிகவும் கவர்ந்தன. அன்று எத்தனையோ அலுவல்கள் அவருக்கு இருந்தும், அண்ணாவோடு மேலும் பேச வேண்டும் என்றே பெரியாருக்குத் தோன்றியது.

"அப்படியானா, படிப்பு முடிஞ்சதும் என்ன செய்யப் போவதா உத்தேசம்?"

"பொது வாழ்வில் ஈடுபடப் போகிறேன் ஐயா!"

அண்ணா அப்படிச் சொன்னதும் பெரியாரின் பற்கள் தாடிக்கு வெளியே வெள்ளையாகத் தெரிந்து முறுவல் காட்டின. அருகில் நின்றிருந்த அண்ணாவை அன்போடு இழுத்துத் தம்மோடு அணைத்துக் கொண்டார்.

"இங்கே 'செங்குந்தர் இளைஞர் மாநாடு' கூட்டியிருக்கேன். மாநாடு நடத்திய பலனை இப்பவே கண்டுட்டேன். தம்பி, ஒன்னைப் போல இளைஞருங்க தான் இப்படி வலியப் பொது வாழ்வுக்கு உற்சாக வெள்ளமாகப் புரண்டு வரணும். நீயும் வா! வா!" என்று வாயார வரவேற்றார், பெரியார்.

1935-ஆம் ஆண்டில் திருப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சி இது. எத்தனையோ தேசிய, அரசியல் எழுச்சிகளுக்கு இடம் கொடுத்த திருப்பூர், பெரியார்-அண்ணா சந்திப்புக்கும் காரணமாக இருந்தது. அந்தச் சந்திப்புதான் அண்ணாவின் வாழ்க்கையில் ஒரு திருப்பம் தந்தது. அன்று முதல் பெரியார்-அண்ணாவின் அரசியல் குருவானார்; தந்தையானார்; தலைவரானார்!

— 'அண்ணாவின் கதை'
தினமணி கதிர்

# முப்பால் தந்த வள்ளுவருக்கு

# முக்கடல் சங்கமத்தில் உருவச் சிலை!

## -முதல்வர் கலைஞர்-



திருவள்ளுவர் சிலையின் மாதிரி தோற்றம்

**133** அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை இங்கே குமரிக் கடலிடையே அமைக்கப்பட விருக்கிறது. ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய் செலவில் அந்தச் சிலை அமைவதற்கான எல்லா விதமான ஏற்பாடுகளும், முழு முயற்சிகளும் ஆக்கப் பூர்வமான பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டன.

இங்கே திருவள்ளுவர் சிலை வைப்பதற்கான உளியின் ஓசை கேட்கத் தொடங்கும். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. விவேகானந்தர் மண்டபம் இங்கே அமைக்கப்பட்டபோது, பல நேரங்களிலே நான் இங்கே வந்து தங்கியிருந்த நேரத்தில், இரவு எல்லாம் உளியின் ஓசை கேட்டுக் கொண்டே இருக்கும். ஒரு தனி இசையாகவேகூட என்னுடைய செவிகளிலே ஒலித்தது. அதுபோன்ற ஒரு இசையைத் திருவள்ளுவர் சிலைக்காக ஒலிக் கிறார்கள் என்கின்ற பேரானந்தமான நினை வுடன் - சிலையைக் காண நான் அடிக்கடி இந்த மாவட்டத்திற்கு வருவேன். இந்தக் கடற்கரையிலே உள்ள விடுதிகளிலே தங்குவேன். அந்த ஓசையைக் கேட்பேன். அந்த ஓசை எழும்போதெல்லாம் திருக்குறளைக் கேட்கின்ற இன்பத்தைப் பெறு வேன் என்று நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்தச் சிலை 133 அடி உயரத்தில் அமைகிறது என்று இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே அடி பீடம் 38 அடி உயரம். அந்த பீடத் திற்கு மேல் வள்ளுவரின் சிலை 95 அடி. இதுகூட ஒரு இலக்கணத்தோடு, ஒரு நயத்தோடு, சிற்ப நயத்தோடு இந்த அடிகளின் கணக்குகள்கூட அமைந்திருக்கின்றன.

பேராசிரியர் இங்கே அழகாகக் குறிப்பிட்டார். நாஞ்சிலார்கூட அதை எடுத்துச் சொன்னார்.

முப்பாலைப்போல மூன்று கடலும் கூடுகின்ற இந்த இடத்தில் வள்ளுவருக்குச் சிலை அமைகிறது என்று அவர்கள் இங்கே அழகுபட வர்ணித் தார்கள்.

அதைப்போல இந்த 38 அடி எதைக் குறிக்கிறது என்றால்- வள்ளுவருடைய மூன்று பால்களில் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் இவைகளில்- அறத்துப்பால் 38 அதிகாரங்களைக் கொண்டது. எனவே, அறத்தின் அடிப்படையில் தான் பொருளும் இன்பமும் அமைகிறது, என்பதற்கு ஏற்ப 38 அடி பீடமும், பொருட்பாலும், இன்பத்துப்பாலும் 95 அதிகாரங்கள் கொண்டவை. அதைக் குறிக்கும் விதத்தில் அது திருவள்ளுவர் சிலையாகவும் அமைய இருக்கின்றது.

அது மாத்திரமல்ல; ஏதோ தூரத்தொலைவுகளிலிருந்து பார்த்தால் ஒரு பெரிய சிலை என்கின்ற அளவோடு மாத்திரமல்ல; உள்ளே சென்று வர, புறத்திலே மாத்திரமல்ல; அகத்திலேயும் அறிகின்ற அளவிற்கு அந்தச் சிலை ஒரு கூடு வடிவமாக அமையப்பெற்று, சிலைக்குள்ளேயே மக்கள் சென்று சிலைக்குள் இருந்தவாறே வெளிப்புறங்களையெல்லாம் பார்க்கக்கூடிய அளவில் அமைக்கப்படுகிறது. அதிலும் ஒரு புதுமையாக உச்சிக்குச் சென்ற உடன் அங்கு வெற்றிடம் என்று இல்லாமல் உட்பகுதியிலேயே ஒரு சிறிய வள்ளுவர் சிலை 5 அல்லது 6 அடி உயரத்தில் தரைப்பகுதியிலே உள்ளே இருந்து பார்ப்பதற்கு ஏற்ற வகையிலே அமைக்கப்படுகிறது.

இவைகளையெல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன். கற்பனை செய்து பார்க்கிறேன். இந்தக் கற்பனையெல்லாம் இரவிலே கனவாக வர வேண்டும் என்றுகூட நான் விரும்புகிறேன்; வேண்டுகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு சிலையை அமைத்து, தமிழகத்திலே உள்ள 5 கோடி மக்களிலே பாதிப் பேராவது இந்தப் பகுதிக்கு வந்து, கன்னியாகுமரி முனையிலே இருந்து திருநெல்வேலி மாவட்டம், மதுரை மாவட்டம் வரையிலே பெருகி இருக்கின்ற மக்கள் கடல், நேரடியாகச் சிலை திறப்பு விழாவைக் காண முடியாவிட்டாலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலமாகத் தமிழ் மக்கள் அந்தச் சிலை திறப்பு விழாவைக் காணவும்- அந்தச் சிலை திறப்பு விழாவைக் காண உலகம் முழுவதிலுமிருந்தும் தலைவர்களும் உலகம் முழுவதிலுமிருந்து தமிழ்ப் பெருங்குடி மக்களும், வெவ்வேறு இனத்தவரும் வரவேண்டும் என்கின்ற கனவைக் காணுகின்றேன். அந்தக் கனவு பலிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். அது பலிப்பதற்கான வாழ்த்துக்களை உங்களிடமிருந்து நான் வேண்டுகிறேன்.

**-6.10.90 அன்று, கன்னியாகுமரியில், கடலிடையே திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணியைத் துவக்கி வைத்து, ஆற்றிய உரையிலிருந்து.**



# புதிய விடியல்

**டாக்டர் கு.வெ. பாலசுப்பிரமணியன்**

**பெரியார்க்குக் கைத்தடிபோல் இருந்து பின்னர்**
**பீரங்கி போல்வளர்ந்து தமிழி னத்தை**
**வரிவேங்கைக் குலமாக வளர்த்து விட்ட**
**வளர்தமிழின் பேரறிஞன்; குற்றா லத்தின்**
**அருவிக்கோர் மொழிபெயர்ப்பு; கோடி மக்கள்**
**அசையாமல் அமரவைக்கும் மகுடிக் காரன்;**
**செருக்கற்ற எளிமையாலே உடன்பி றப்பாய்ச்**
**செல்வமிகு இளையோரை அணைத்தார் அண்ணா!**

**காலமெனும் வல்லாளன் காஞ்சி யென்ற**
**கடும்பற்று மதவாதக் காட்டிற் குள்ளே**
**தூழநெடுந் தீப்பரவ வைத்த சின்னச்**
**சுடர்நெருப்புத் துண்டாவார்; அறிஞர்; செம்மல்;**
**வேழநெடும் படைபோல இளைஞர் தம்மை**
**முன்நடத்திச் சென்றமகன்; சீர்தி ருத்தப்**
**பாலமிட்டுப் பழமையாற்றில் மூழ்கி டாமல்**
**பைந்தமிழர் தமைக் காத்த மன்னன், அண்ணன்!**

**தென்னாட்டின் போர்முரசம்; இந்தி யென்னும்**
**தீநாக்குத் தமிழகத்தைத் தீண்டி டாமல்**
**தன்னாவால் பறைமுழக்கிக் காத்த வேந்தன்;**
**சந்தமிகு செந்தமிழ்க்குச் சொந்தக் காரன்;**
**முன்னிருந்த ஆட்சியெனும் பாறாங் கல்லை**
**முன்வந்து தன்நாக்கு நெம்பு கோலால்**
**சொன்னபடி புரட்டியவன்; அண்ணா என்னும்**
**சூரியனே புதுவிடியல் கோல மிட்டான்!**

**பெரியாரும் அண்ணாவும் இருக்கின் றார்கள்;**
**பிறந்தார்கள், சாகவில்லை; வரலாற் றேட்டின்**
**வரிகளிலே எழுத்தெழுத்தாய்க் கலைந்திடாமல்**
**வாழ்கின்றார்; இல்லையெனில் இந்த மண்ணின்**
**நெறியெல்லாம் பிறராலே நீங்கி இந்நாள்**
**நீர்க்குமிழி போல் மறையும் தமிழச் சாதி;**
**சிறிதேனும் நினைந்திருப்போம் சிலைமுன் நின்றே**
**சிந்திப்போம் அவ்விருவர் பிறந்த நாளில்!**

'தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது' வழங்கும் விழா 26.8.'90 அன்று சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கில் மாண்புமிகு கல்வியமைச்சர், பேராசிரியர் அவர்கள் தலைமையில்சிறப்புற நடை பெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இவ்விழாவில் கலந்துகொண்டு விருதுகளை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு கு.சிவஞானம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் தொடக்கவுரையாற்றினார். அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. அனந்த கிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் பிறந்த நாளான 26-ஆம் நாளன்று நடைபெற்ற இவ் விழாவில் புலவர் கா. கோவிந்தன் அவர்களுக்கும், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்களுக்கும் 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. பின்னர், புலவர் கா.கோவிந்தன் அவர்களும், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களும் ஏற்புரை வழங்கினார்கள்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருதுகளை வழங்கி, விழாப் பேருரை ஆற்றுகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

இரண்டாவது ஆட்டை சொல்லும் செய்தி

காலத்திலேயே தன்னை இணைத்துக் கொண்டவர். தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அன்புத் தம்பியாகவும் எங்களுக்கெல்லாம் உற்ற துணையாகவும் இருந்து இந்த இயக்கம் சோதனை களையும் வேதனைகளையும் சந்திக்கின்ற கால கட்டத்திலும் தமிழ்நாட்டு மக்களை ஒளிமிகுந்த எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும் என்கின்ற பணியில் கைகோத்து நிற்பவர்.

திருவத்திபுரத்திலே செய்யாறில் அவர் பல ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து நடத்தி வருகின்ற பொங்கல் விழா அழைப்பிதழை இங்கே காட்டி அந்த விழாவிற்கு என்னையும் பல முறை அழைத் திருப்பதைக் குறிப்பிட்டார். அவர் என்னை அந்த விழாக்களுக்கு அழைத்த நேரத்தில், இப்படி கொக்குப்போல் நரைத்த தலை அவருக்கு இல்லை. நானும் இப்படி இல்லை. அந்த அளவிற்கு இளமைத் தோற்றத்தோடு 1947-48-49-ஆம் ஆண்டுகளில் அவர் தமிழர் திருநாளைத் திருவத்திபுரத்தில் கொண்டாடியது மாத்திரம் அல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை 'திராவிட நாடு' இதழின் முதல் பக்கத்தில் புலவர் அவர்களைப் பற்றியும் திருவத்திபுரம் திராவிட இயக்கத் தோழர் களைப் பற்றியும் பெருமையோடு கட்டுரை தீட்டு கின்ற அளவிற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய "இரணியன் அல்லது இணையற்ற

# திரு.வி.க. விருது வழங்கும் விழா

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களுடைய நினைவு போற்றுகின்ற இந்த விழா நிகழ்ச்சியில் தமிழக அரசின் சார்பாக இரு அறிஞர் - பெரு மக்களுக்கு விருது வழங்குகின்ற பேறு பெற்றமைக் காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது பெறும் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள் புலவர் கோவிந்தனார் அவர்கள் பிறந்ததும் 1916. இருவருமே 16.

அத்தகைய இரண்டு தமிழ்ப் பெருமக்களுக்கு விருது வழங்குகிற - நிகழ்ச்சியிலே தலைமை வகிப்பதில் பேராசிரியர் பெருமை கொள்கிறார்; விருதுகளை வழங்கியதில் நான் பெருமை கொள் கிறேன். அவர்களெல்லாம் தமிழை நன்கு அறிந்த வர்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் தமிழை அறிந்தவர்களை அறிந்தவன். அதனால் தான் அவர்களுக்கு விருது வழங்குவதிலே நான் பெருமை கொள்கிறேன். அதை ஒரு பெரும் பேறாகக் கருதுகிறேன்.

புலவர் அவர்கள் இந்த இயக்கத்தில்-திராவிட இயக்கத்தில் தந்தை பெரியார் அவர்களுடைய

வீரன்" என்ற நாடகத்தைத் தடையை மீறி நடத்து வதற்கும் காரணமாக இருந்தவர்.

இப்படி தடை பல கடந்து தமிழ்ச் சமுதாயம் தன்மானத்தோடு வீறுகொண்டு விளங்கிட வேண்டும். நெஞ்சை நிமிர்த்தியே வாழ வேண்டும் என்று மனதிலே உறுதி படைத்தவராக அந்த வட்டாரத் திலே உலவிக் கொண்டிருப்பவர் புலவர்.

இங்கே வரவேற்புரை ஆற்றிய சிவஞானம் புலவரைப்பற்றிக் குறிப்பிடும்போது, முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் என்று சொன்னார். இந்த 'முன்னாள்' என்ற சொல்லை இனிமேலா வது தமிழ் அறிஞர் பெருமக்கள்கூட தகுதியான இடத்தில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாள் சட்ட மேலவை என்று சொன்னால் பொருந்தும். ஏனென்றால் இப்போது சட்ட மேலவை இல்லை. சட்டப் பேரவை - இருக்கும் போதே முன்னாள் சட்டப்பேரவை என்று சொல்வது மரபல்ல. சட்டப்பேரவையின் முன்னாள் தலைவர் என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

புலவருடைய தமிழ் அறிவு எவ்வளவு விரி வானது, எப்படிப் பரந்து கிடப்பது - வான்போல,

கடல்போல என்பதையெல்லாம் நான் விளக்கி நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. அவருக்கு எத்தகைய புகழ் தமிழால் - தமிழ் உரிமைகளுக்காக நடத்துகின்ற போராட்டத்தால் கிடைத்திருக்கிறதோ, அதைப் போலவே வேறு முனையில் தமிழைக் காப்பாற்றவும், தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவும் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பெருந்தகைதான், தமிழ்ப் பேரறிஞர் தான் அ.ச.ஞானசம்பந்தனார் அவர்கள்.

அவருக்கு நினைவு இருக்கிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது- 1950 அல்லது 51-ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். வடசென்னையில் ஒரு பள்ளி நிகழ்ச்சியிலே அவ்வை டி.கே.சண்முகம் தலைமையில் நானும் அ.ச.ஞானசம்பந்தமும் பேசினோம். ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பேசினோம். அப்போது அவர் என்பால் கொண்டிருந்த அன்புக்கு மாறுபாடு இல்லை; நான் அவர்பால் கொண்டிருந்த அன்புக்கு மாறுபாடு இல்லை. கருத்துக்களிலே அன்றைக்கு மாறுபாடு இருந்தது.

அவ்வை டி.கே.சண்முகம் தலைமை ஏற்றிருந்த காரணத்தால் இருவரும் எடுத்துச் சொன்ன கருத்துகளுக்குச் சமரசமான ஒரு முடிவை அந்த விழா நிகழ்ச்சியிலே அவர் தெரிவித்தார். அவரை நான் அடிக்கடி சந்திக்கின்ற வாய்ப்பு கிட்டாதுபோயினும்; அவருடைய நூல்கள் வாயிலாக அவரைப் பார்த்துக்கொண்டிருப்பவன் நான். அவருடைய எழுத்துக்கள் வாயிலாக அவரைச் சந்தித்துக் கொண்டிருப்பவன் நான்.

அவர் இன்றைக்கு ஆற்றுகின்ற பெரும்பணி திரு.வி.க. அவர்களின் வேதனையைப் போக்குகின்ற பணி என்று சொன்னால் அது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு.வி.க. தமிழைப் பற்றியும், தமிழர்களைப் பற்றியும் சொன்ன ஒரு கருத்து - ''தமிழினைப் போல் உயர்ந்தமொழி தரணியில் வேறு எங்குமில்லை, தமிழனைப் போல் மொழிக் கொலையில் தலைசிறந்தோர் எவர் உளரே?'' இது திரு.வி.க.வின் வேதனை. அந்தக் கொலையைத் தடுக்கின்ற முயற்சியிலே வெற்றிபெற்று மேலும் வெற்றிகளைப் பெறத் துடித்துக் கொண்டிருப்பவர் தமிழ்ப் பேரறிஞராக விளங்குகின்ற அ.ச.ஞானசம்பந்தம் ஆவார்.

இந்த இருவருக்கும் திரு.வி.க.வின் பெயரால் விருது வழங்குவது என்பது மிகப் பொருத்தம். இதைவிடப் பொருத்தமாக வேறு இருவர், இந்த நாளில் இந்த விருதினைப் பெறக் கிடைத்திலர் என்பதுதான் என்னுடைய முடிந்த முடிவாக இந்த அவையிலே நான் வெளியிட விரும்புகின்ற கருத்தாகும்.

எனவே திரு.வி.க. தொடங்கிய அந்தப் புதிய வரலாறு தமிழால் எழுதமுடியும்; தமிழாலும், தமிழைப் பயன்படுத்தியும் செய்திகளை வெளியிடலாம் என்று தொடங்கிய அந்தப் புரட்சிதான் இன்றளவும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

ஆனால் இப்போது அந்தத் தமிழ்ப் புரட்சியை மாய்த்திடலாம் என்ற எண்ணத்தோடு சில ஏடுகளில் வெளிவரும் தமிழ்க் கதைகள்-கட்டுரைகள் இவைகளை நான் படிக்கிறேன். அவற்றில் தமிழைத் தேடுகிறேன், தேடுகிறேன், தேடிக் கொண்டேயிருக்கிறேன்.

ஒரு கதையில் எழுதியிருக்கிறார்கள்:

''சர்மிளா திடீரென்று அந்த ரூமுக்குள் எண்டர் பண்ணியது எல்லோருக்கும் திரில்லாக இருந்தது. அவள் ஃபிளவர்டிசைன் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த நைலான் சாரியுடன் ''குட்மார்னிங்'' என்று கூறிக்கொண்டே கையில் இருந்த ஹேண்ட் பாக்கிலிருந்து ஒரு புளூ கலர் கர்சீப்பை எடுத்தாள். வாட் ஏ வொண்டர்! அந்தக் கர்ச்சீப் ரத்தக்கறை படிந்திருந்தது. சர்மிளாவின் ஃபேஸ் அதைவிட ரெட்டிஷாக இருந்தது. ரூமிலிருந்த ஸ்டுடன்ட்ஸ் ஸ்டன்னாகி நின்றனர்!''

இப்படி ஒரு கதையிலே படித்தேன்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது? தமிழ் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

வயதானாலும் வாட்களாக இருந்து, பேராசிரியர் அ.ச.ஞா. அவர்களே, புலவர் கோவிந்தனார் அவர்களே! அந்தத் தமிழ்க்கொலையைத் தடுத்திட எங்களுக்குத் துணை நில்லுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

-இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

## வேலை வாய்ப்புத் தரும் பொம்மைத் தொழில்



காஞ்சிபுரம், மீஞ்சூர், சென்னை கொசப்பேட்டை, கடலூர் ஆகிய இடங்களிலிருந்து பொம்மைகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வருகின்றன. இது தவிர, பாண்டிச்சேரி, ஆந்திர மாநிலத்திலுள்ள கொண்டப்பள்ளி, சென்னப்பட்னா மற்றும் கர்நாடகா, மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், கேரள மாநிலங்களிலும் வண்ணமிகு பொம்மைகள் தயாரிக்கப்படுகின்றன.

இதன் மூலம் ஏராளமான கிராமப்புறக் கைவினைஞர்கள் வேலைவாய்ப்பும் பெறுகிறார்கள். வீட்டுக்கு ஒரு பொம்மை வாங்குவதன் மூலம், ஏழைத் தொழிலாளி ஒருவருக்கு வாழ்வு தருகிறோம் என்பதை எண்ணி நாம் மகிழலாம்.

மண், காகிதம், மரம், துணி, உலோகம் முதலானவற்றாலான கண்ணைக் கவரும் வண்ண பொம்மைகள் அண்மையில் காதி கிராமோத்யோக் பவனில் நடந்த பொம்மைக் கொலுவில் இருந்தன.

# அண்ணா ஒரு மாலைமணி

எஸ்.எஸ்.தென்னரசு
எம்.எல்.ஏ.



சர்க்கரைப் பொங்கல் திகட்டக் கூடியது என்பது உலகம் கண்ட உண்மையே. ஆனால் அதனினும் இனிய, அண்ணாவின் தமிழ் யாருக்கும் திகட்டுவதில்லை என்பதுதான் ஆச்சரியம்! புலவர்கள் கையாளும் கடுந்தமிழைக்கூட அண்ணா பொது மேடைகளில் இனிதாகப் பயன்படுத்தி மகத்தான வெற்றியை ஈட்டியிருக்கிறார். பன்னெடுங் காலமாக, தமிழ் இலக்கியங்களிலும், அதன் பதவுரைகளிலும் முடங்கிக் கிடந்த அரிய தமிழ்ச் சொற்களைப் பொது மக்கள் மத்தியில் புழக்கத்திற்குக் கொண்டுவந்த பெருந்தகையாளர் அறிஞர் அண்ணா அவர்கள்தான்.

அண்ணாவின் மேடைப்பேச்சுகள் இலக்கியங்களுக்கு இணையானவை! அண்ணாவின் எழுத்துக்களைவிட, அண்ணாவின் பேச்சுகளே ஏழை, எளிய மக்களிடையே அதிக அளவிற்குக் கிளர்ச்சியை உண்டு பண்ணியிருக்கின்றன. 'ஞாயிற்றுக்கிழமை அண்ணா பேசுகிறார்-' 'சனிக்கிழமை அண்ணா வருகிறார்'- என்ற சொற்றொடர்கள் தொடர்பு கொண்ட பகுதிகளில் ஆலயங்களின் 'காப்புக் கட்டுக்கள்' போல மூச்சுக்கு முப்பது தடவைகள் பேசப்படுவதுண்டு! அறிஞர் அண்ணா ஒரு இயக்கத்தின் தந்தை என்றாலும், அவரது மேடைப்பேச்சு ஒரு இனமக்களுக்கு வேத வாக்காகவே இருந்தது!

அண்ணா, எதற்கும் தனக்குள்ளேயே ஒரு இலக்கணம் வகுத்துக் கொள்ளும் பழக்கம் கொண்டவர். பொது மேடைக்கு அவர் புறப்படுவதிலிருந்து நிகழ்ச்சி முடிகிறவரை அண்ணாவிற்கென்று சில சிறப்புக்கள் உண்டு!



நீண்டநேரம் பகலில் தூங்கி விட்டு அண்ணா ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டால் அன்று அவர் உரை மிகச் சிறப்பாகவும், தனிச்சுவையுடனும் அமையும் என்ற நம்பிக்கை, அண்ணாவை விட, அவரைச்சுற்றியிருக்கும் அவரது தலைமுறையாளருக்கு மிகுதியாக இருக்கும்! இதுபற்றி அண்ணாவிடம் கேட்டபோது ''அது முழுவதும் உண்மை அல்ல; ஓரளவு உண்மை!'' என்று கூறியுள்ளார்.

அறிஞர் அண்ணா, பொதுக் கூட்டங்களுக்குத் தாமதமாகத்தான் வந்து சேருவார். அதற்கு அவர் கூறும் காரணம்- ''நான் கடைசியாகத்தானே பேசுகிறேன். பின் எதற்காக முன்கூட்டியே வந்து உட்கார்ந்திருக்க வேண்டும்''- என்பதுதான். உண்மை இதுவாக இருக்க, விமர்சகர்களோ, அண்ணா தாமதமாக வருவதை அவரது குணம் என்று கற்பித்துக்காட்டி வந்தார்கள்.

எவ்வளவு நேரமும் சுவை குன்றாமல் பேசும் பேரறிவு பெற்றவர் அறிஞர் அண்ணா. ஆனால் அவர் நெடுநேரம் பேசுவதில்லை. அதுவும் மிகப்பெரிய கூட்டங்களில் பேச்சைச் சுருக்கிக்கொள்ளும் பழக்கத்தை அவர் மறந்தும் கைவிட்டதில்லை. அறிந்தவைகளையெல்லாம் பேசிவிடுவது அவருக்குப் பிடிக்காத



ஒன்று. அதேபோது, பேச வேண்டியதைப் பேசாமல் விடுவதையும் அவர் விரும்புவதில்லை. சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லுவதையே அவர் பெரிதும் விரும்புவார்.

அண்ணா, அவர் கலந்துகொள்ளும் கூட்டங்களில் பேசத்தெரிந்தவர்கள் எத்தனை பேர் மேடையில் இருந்தாலும் அவர்கள் அனைவரையும் பேசவைப்பார். எவரது மனக் குறைக்கும் அவர் ஆளாக மாட்டார். எத்தனை பேர் பேசினாலும், அத்தனை பேரும் சொல்லாத புதிய கருத்தை அன்றைய கூட்டத்தில் அண்ணா வெளியிடுவார். அதுவே அவருக்குள்ள தனி மகத்துவம்!

அறிஞர் அண்ணா, அவர்களின் சொற்பொழிவுகளில் உபகதைகள், உவமானங்கள் இடம் பெறாமல் இருக்காது. இளைஞர்களுக்குச் சொல்லும் போது காதல் கதைகளையே உதாரணங்களாகக் கூறுவார். தாய்மார்களுக்குச் சொல்லும் போது, குழந்தைகளைப் பற்றியே அவரது உவமானங்கள் சுற்றிச்சுற்றி வரும். தன்னுடைய இயக்கத்தின் பொறுமையைப்பற்றிச் சொல்ல நேர்ந்தால் அந்த ஒரு தாயாகவே வர்ணிப்பார். அவசியப்பட்டால் இயக்கத்தைப் பருவமங்கையாக எடுத்துக்கொண்டு அதற்கு வரும் விபத்துக்களை விளக்குவார். விளக்க வேண்டும் என்று விரும்பிய கருத்தை வந்திருப்பவர்கள் எளிதில் புரிந்துகொள்வதற்கு அவர் எடுத்துக் கொண்ட உதாரணங்களே பேருதவி புரிந்திருக்கின்றன. அவரது வாழ்நாளில், மக்களுக்கு அவர் புகுத்த வேண்டுமென்று ஆசைப்பட்ட கருத்துக்களைப் புகுத்தத் தோற்றதில்லை. தானே உருவாக்கும் கொள்கையானாலும், முதலில் அதை நன்றாகத் தெளிந்து உணர்ந்த பின்னரே அதன் மீது நம்பிக்கை வைப்பார். அண்ணா நம்பிக்கை கொண்ட பின்னர்தான் அந்தக் கொள்கையைப் பொது மக்களுக்குப் போதனை புரிவார். போதனை புரியத் தொடங்கிவிட்டால் அதனைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளும்வரை ஒவ்வொரு நாளும் புதிய புதிய கதைகள் மூலம் விளக்கிக் கொண்டிருப்பார். அப்போது மக்கள் அதைப் பின்பற்றவில்லையென்றால் கூட அண்ணா பின்வாங்கிவிடமாட்டார். ''மக்களுக்குப் புரியும் வகையில் எனக்குத்தான் சொல்லத் தெரியவில்லை; அது என் குறையே தவிர கொள்கைகளின் குறையல்ல'' என்று தன்னடக்கத்தோடு கூறுவாரே தவிர, கொள்கைகளை விட்டுவிட மாட்டார்.



அறிஞர் அண்ணாவின் பேச்சுக்கு உதாரணம் சொல்லவேண்டுமானால் இமயமலையைத்தான் சொல்ல முடியும்; இமயம் உயரத்தில் பெரியது என்பதற்காக மட்டுமல்ல; இமயமலைக்கு இன்னொரு தனிச்சிறப்பு உண்டு. இமயத்தின் உயரத்தில் ஒவ்வொரு ஆயிரம் அடிக்கும் அதன் இதமும் பதமும் மாறுபடுகிறது. அடிவாரத்தில் தானியங்கள் விளைகின்றன. கொஞ்சம் உயரப்போனால் செடி கொடிகள்; அதற்கு மேலே போனால் ஊசியிலை மரங்கள்; சிகரத்தில் பனிக்காடு! அண்ணாவின் மேடைப்பேச்சும் அதுபோன்றதே. தாழ்வாரத்தில் பாமர மக்களுக்குரிய சாதாரணப்பேச்சு, அடுத்து கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான தத்துவ விளக்கம்; மூன்றாவதாக, அரசியல் ஆக்க மன்றங்களில் அறிவுரை; இறுதியாக இலக்கியத்திறனாய்வு! ஒரே இமயமலையின் மடியில் பலதரப்பட்ட வளங்கள் இருப்பதுபோலவே அண்ணாவின் அறிவுள்ளத்தில் விதவிதமான சிந்தனைகள் விளைந்திருக்கின்றன.

அறிஞர் அண்ணா தனது மேடைப் பேச்சு ஒரு நாளும் தோல்வியடையாது என்று திடமாக நம்புகின்றவர். காரணம், தான் பேசவேண்டியதை, தேர்ந்து எடுத்துத்தான் பேசுவதாகக் குறிப்பிடுகிறார்.

ஒரு முறை, அறிஞர் அண்ணா அவரது தலைமுறையினரோடு பேசிக் கொண்டிருக்கும்போது ''உன் பேச்சு ஊஞ்சல் மாதிரி! இங்கும் அங்கும் போய்வரும்'',

''உன் பேச்சு ராட்டினம் மாதிரி; ஒன்றையொன்று தொடாது''.

''உன்பேச்சு கிலுகிலுப்பை மாதிரி, அழுகின்ற குழந்தையைக் கூடச் சிரிக்க வைத்துவிடும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்போது அண்ணாவின் அன்புக்குரிய ஒரு தம்பி அண்ணாவிடம் ''உங்கள் பேச்சு எது மாதிரி'' என்று கேட்டார்.

''என் பேச்சு, மணிகளை எடுத்து மாலையாகத் தொடுப்பது மாதிரி'' என்று கூறினார். அதுதான் நூற்றுக்கு நூறு உண்மை.

பேரறிஞர் அண்ணா, பட்டம் பெற்றது பொருளாதாரத்துறையில்; ஆனால் அவர் பட்டம் பெறாமலே மொழிப்புலமையிலும் வல்லுநராகவும் திகழ்ந்தார். அண்ணாவிடம் உள்ள மொழிப்புலமையில் தமிழ் மிஞ்சியதா? ஆங்கிலம் மிஞ்சியதா? என்று இன்றுவரை எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்

கண்ட அறிவியக்கத்தின் குழுக்கூட்டங்களில் கூட, பேசுவதற்கு முன் ஆங்கிலத்தில்தான் அண்ணா குறிப்புக்களைத் தயார் செய்வார். அவர் சொற்பொழிவு, பாடத்திட்டங்களைப்போல முறைப்படி அமைந்திருக்கும். முன்னாடி சொல்ல வேண்டியதைப் பின்னாடியோ, முடிவுரையில் கூறவேண்டியதைத் தொடக்கத்திலோ அள்ளித் தெளித்து ஒருபோதும் அவையோரை அண்ணா முகஞ்சுளிக்கச் செய்ததில்லை.

இதிகாசங்களில் அவருக்கு மிகவும் பிடித்தமானது இராமாயணம்தான்! வாதம் புரிவதற்காக மட்டுமின்றி, அது ஒரு ராஜ குடும்பத்தின் கதை என்பதற்காகவும் அண்ணா அதை அதிகம் விரும்பிப்படித்தார், என்று அவரது நெருங்கிய நண்பர்கள் கூறுகிறார்கள். மேடைகளில் உதாரணங்கள் கூட இராமாயணத்தில் இருந்துதான் அண்ணா அதிகமாகக் கூறியிருக்கிறார். பாரதத்தில் தான் நிகழ்ச்சிகள் அதிகம் என்றாலும் அண்ணா பாரதத்தை அரிதாகத் தான் பயன்படுத்தினார்.

## உண்மையான சோசலிசம்

**ஒரு சிலரின் வாழ்க்கை வளமாகவும் - பலருடைய கண்கள் குளமாகவும் இருக்கின்ற சமுதாய நிலை மாறவேண்டும் - அதுதான் உண்மையான சோசலிசம்.**

**முதல்வர் கலைஞர்**

அண்ணாவின் மேடைப்பேச்சு, பாட்டுக்கச்சேரி போன்று, திட்டமிட்டுத் தயாரிக்கப்படுவதல்ல. மேடைக்கு வந்தபிறகு அமைவது தான் அவர் சொற்பொழிவு. அறிஞர் அண்ணா, எல்லோரையும் கவரும் மணமகனைப் போல் மேடையில் அரசோச்சி, ஈடில்லாப் புகழ் பெற்றதற்கு அவரது வெற்றிக்குரல் ஒரு காரணம்; 'பேரறிஞர் அண்ணாவைப்போன்ற ஒரு மணிமொழியாரை- அறிவாற்றல்மிக்க கனிமொழியாரை இந்திய நாட்டின் பொது மேடை இனிமேல் கண்டு மகிழுமா? என்பதற்குக் காலம் தான் விடையளிக்க வேண்டும்' என்று அண்ணா மறைந்தபோது அறிவாளர்கள் பலர் ஏங்கினார்கள். ஆனால் அந்தக்குறையைத் தமிழக முதல்வர் கலைஞர் இன்று நிறைவு செய்துவிட்டார்.

பேச்சாற்றல், எழுத்தாற்றல், உவமைகளைக் கையாளுதல், கொள்கை விளக்கம் அளிப்பதில் பின்பற்றும் லாவகம்- எல்லாவற்றிலுமே இன்று அண்ணாவின் ஆற்றல் அனைத்தையும் சுவீகரித்து ஒளி பெற்று விளங்குவது முதல்வர் கலைஞர் தான் என்பது நாடறிந்த உண்மை! அண்ணா இல்லாத குறையை நிவர்த்திக்கும் கலைஞரை, அண்ணா நினைவு நாளில் நினைத்து வாழ்த்தி மகிழ்வது தான் தமிழரின் கடமை!



**சென்னை டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் தொகுதியைச் சேர்ந்த செரியன் நகரில் சுவர் இடிந்து விழுந்து உயிர் துறந்த 3 குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா ரூ.5,000, காயமடைந்த 6 பேர்களுக்கு தலா ரூ.500 நிவாரண நிதியை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் வழங்கினார்கள். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ஷீலாராணி சுங்கத் இ.ஆ.ப. தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.பி.சற்குணம் உடன் உள்ளனர்.**

# ஈரோட்டண்ணல்

பாவலர் நாரா. நாச்சியப்பன்

பெரியார்தம் சொற்பொழிவைக்
கேட்டவர்கள் வெறுப்பகற்றிப்
பெரியார் கொள்கைக்

குரியாராய் மாறுவதன்
விந்தையிதன் உட்பொருளைச்
சொல்வேன்; கல்வி

தெரியாத மக்களையும்
வசப்படுத்தும் முறைமைதனில்
திறமை யாக

உரைபகர்வார்; தன்னுளத்துப்
பட்டதெலாம் ஒளியாமல்
உரைப்பார் கண்டீர்!

காற்றடிக்கும் புயல்வீசும்;
இடையின்றி மழைபொழியும்;
கருத்து வெள்ளம்

போற்பெருகும்; அருவியென
ஓடிவரும்; மணிக்கணக்காய்ப்
பொழியும்! பேச்சில்

ஆர்த்திருக்கும் நாட்டிலுள்ள
வகைப்பட்ட பழமொழிகள்
அத்த னையும்

சோற்றினுக்குக் காய்கின்ற
ஏழைகட்குச் செயல்காட்டிச்
சோர் வகற்றும்!

உவமைகளோ குவிந்திருக்கும்;
சுவைப்பேச்சுப் பேசுங்கால்
ஒன்றோ டொன்றாய்த்

தவழ்ந்துவரும் கேள்விகட்குப்
பதில்சொல்லத் தெரியாமல்
தவித்த பேர்கள்

இவர்கட்சித் தொண்டர்களாய்
இன்றிருக்கும் நிலையொன்றே
ஈரோட் டண்ணல்

இவர்பேச்சின் திறம்விளக்கப்
போதுமெனக் கூறிடுவேன்;
எழுச்சி கொள்வேன்!

சொற்பொழிவு மேடையிலே
ஏறியதும் நான்சொல்லும்
சொற்கள் தம்மில்

நெற்பயிரை அறுத்துவந்தே
உமி, அரிசி, தவிடிதென
நிலை பிரித்து

வைப்பதுபோல் தனித்தனியே
ஆராய்ந்து பார்த்ததன்பின்
வளர் கருத்திற்

கொப்புவன ஏற்றிடுக!
ஒவ்வாதேல் தள்ளுகென
உரைப்பார் ஐயா!

கருத்துக்குத் தடையிட்டு
வைத்திருந்த மதத்தலைவர்
கயமை மாற்றிக்

கருத்துவெளிப் பட்டால்தான்
மற்றவரும் சிந்தித்துக்
காரி யத்தில்

திருத்தமுற உழைத்திடலாம்!
இல்லையெனில் முன்னேறக்
கருதிச் செல்லும்

கருத்துடையார் தடைப்படுவர்;
எனச்சொல்லி நமைக்கவர்ந்த
பெரியார் வாழ்க!



# நெஞ்சம் மறக்குமோ?

- ரோஜா பாலு

**பே**ரறிஞர் அண்ணா அவர்களின் மனித நேயம் பலராலும் பாராட்டப் பெற்றது. அண்ணா தனது தம்பிகளையும் நேசித்தார். பொதுமக்களையும் நேசித்தார். இவ்வளவு ஏன், பகைவர்களையும் நேசித்தார். அவரது வெற்றிகரமான வாழ்க்கைக்கு இந்த அரும் பண்பு தான் அடித்தளம். அண்ணா பிறரை நேசித்தது போல அண்ணாவை மற்றவர்களும் மிகமிக நேசித்தார்கள். அண்ணாவிடம் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் கூட, அண்ணாவுக்கு எதிரே நின்று தனது கருத்துக்களைக் கூறியதில்லை. தனி மேடை போட்டு அவர்களால் தனி ஆவர்த்தனம் தான் செய்ய முடிந்தது.

அண்ணா ஆறறிவு பெற்ற மனிதர்களை மட்டுமல்ல, ஐந்தறிவு பெற்ற விலங்குகளையும் நேசித்தார். அந்த விலங்குகளும் அண்ணாவை மிக நேசித்திருக்கின்றன.

''வாலைக் குழைத்து வரும்
நாய்தான்-அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா''-

என்று பாரதியார், பாப்பாவுக்குச் சொன்ன அறிவுரையை எந்தப் பாப்பா கடைப்பிடித்ததோ நமக்குத் தெரியாது, அண்ணா அந்த வாசகத்திற்கு வடிவமாகத் திகழ்ந்தார்.

அண்ணா பொமரேனியன் இனத்தைச் சேர்ந்த நாய் ஒன்றை அன்புடன் வளர்த்து வந்தார். அதற்கு சங்கர் என்று பெயர் சூட்டியிருந்தார். அந்த நாயைக் கையில் எடுத்து அணைத்துக் கொள்வதிலும், அதனை முத்தமிடுவதிலும் அண்ணாவுக்கு அளவற்ற ஆர்வம் உண்டு.

1962-ஆம் ஆண்டு வாக்கில், அண்ணா அவர்கள் விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பத்து வாரச் சிறை தண்டனை விதிக்கப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் வளர்த்த அந்த நாய் அண்ணாவைப் பல நாட்களாக வீட்டில் காணாததால் தவியாய்த் தவித்தது. அதனுடைய தவிப்பை அண்ணாவின் இல்லத்தவர்களும் உணர்ந்தார்கள். இந்தத் தகவலை அண்ணாவிடம் சொன்னால், அவர் மனம் நோவார் என்பதால் அவர்கள் தெரிவிக்கவில்லை. ஆனால் அண்ணாவின் நண்பரான கே.டி.எஸ்.மணி அவர்களால் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. அந்தத் தகவலை அறிந்த அண்ணா, அடுத்த முறை தன்னைப் பார்க்க வரும்போது தான் அன்புடன் வளர்த்து வரும் 'சங்கரையும்' அழைத்து வரும்படி கூறினார்.

அதன்பின்னர், அண்ணாவை அவரது இல்லத்தார் ஒருமுறை சந்திக்கச் சென்றபோது சங்கரையும் அழைத்துச் சென்றனர். சிறை அதிகாரிகள் நாயை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டனர். அதனால் ஒரு ஜன்னல் கதவைத் திறக்கச் சொல்லி அதன் வழியாக சங்கரை அண்ணாவிடம் காண்பித்தார்கள். அதைப் பார்த்த அண்ணா மனம் உருகினார். அண்ணாவைப் பார்த்த 'சங்கர்' அவரிடம் தாவி ஓடியது. ஜன்னலின் வழியாகவே தலையையும் கால்களையும் நீட்டி, அண்ணாவை தொட்டுத் தொட்டு ஆறுதல் பெற்றது. அண்ணா அதன் செய்கையைக் கண்டு கண்கலங்கினார். சில விநாடிகள் கழிந்தன. சந்திப்புக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்தது. அண்ணாவும் சங்கரும் பிரிக்கப்பட்டார்கள். கலக்கத்துடன் பிரிந்த சங்கர், கவலையில் மூழ்கியது. தனது கவலையை அடுத்தவர்களிடம் தெரிவிக்க அதற்கு வாய் இல்லாததால் கண்ணீர் வடித்தது. அண்ணாவைப் பிரிந்திருக்கும் நிலையை எண்ணி எண்ணி அது கொஞ்சம் கொஞ்சமாக மெலிந்தது. சில நாட்களில் உயிரையே விட்டு விட்டது.



செய்தி அறிந்த அண்ணாவும் கண் கலங்கினார்.

ஐந்தறிவு உயிருக்குக் கூட அண்ணாவிடம் அளவற்ற பற்றுதல் இருந்து வந்ததையும் விலங்குகளிடத்திலும் பேரன்பு செலுத்திய மாமனிதர் அண்ணா என்பதையும்இந்த நிகழ்ச்சி நமக்கு எடுத்துரைக்கிறது.

**அ**ண்ணா அவர்கள் தனது வீட்டில், மான் ஒன்றை மிகுந்த பிரியத்துடன் வளர்த்துவந்தார். வெளியூர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளுகின்ற காலத்தில், சுற்றுப் பயணத்தை முடித்து, வீட்டுக்குத் திரும்பியவுடன் முதல் முதலாக மானின் இருப்பிடம் சென்று அதனைப் பார்ப்பதும் அதனை ஆசையோடு தடவிக் கொடுப்பதும் அண்ணாவின் வாடிக்கை நிகழ்ச்சி.

ஒருமுறை அண்ணாவைக் காண்பதற்காகப் படத்தயாரிப்பாளர் ஒருவர் வந்திருந்தார். அவர் அண்ணாவை நெருங்குவதைப் பார்த்த மான், தனது கூர்மையான கொம்பினால் அந்தத் தயாரிப்பாளரின் தொடையில் குத்திவிட்டது. இரத்தம் பெருக்கெடுத்தது. அண்ணா உட்பட அங்கிருந்த அனைவரும் திகைப்படைந்தனர். சூழ்நிலையையும் தனது தவறையும் உணர்ந்துவிட்ட மான், உடனே பதறியபடி அண்ணாவின் காலடியில் சென்று விழுந்தது.

தன்னால் குத்தப்பட்ட மனிதர் ஒரு வேளை தன்னைத் தாக்கக்கூடும் - அடுத்தவர்கள் நம்மைத் தாக்கக் கூடும் - அதனால் நாம் அண்ணாவின் காலடியில் சென்று தஞ்சம் அடைவதுதான் நல்லது; அவர் கண்டிப்பாக அபயம் தருவார் என்று மான் எண்ணி, அவரிடம் சென்று சரணாகதி அடைந்தது போலவே இருந்தது, அந்தக் காட்சி. ஐந்தறிவு படைத்த மானுக்குக் கூட அண்ணாவின் இளகிய உள்ளம், இரக்கக் குணம் தெரிந்திருந்தது.

மானின் இந்த அபூர்வச் செயலைக் கண்ணால் பார்த்த அந்தப் படத் தயாரிப்பாளர் - தனக்கு ஏற்பட்ட காயத்தையும், வலியையும் மறந்து, மானின் செயலை எண்ணி நெகிழ்ந்து போனார்.

**ஆ**ண்டுதோறும் பொங்கல் திருநாளின் போது காஞ்சியிலுள்ள தனது வீட்டில், குடும்பத்தவர் அனைவருடனும் அமர்ந்து பொங்கல் உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் அண்ணா. எந்தச் சூழ்நிலையிலும் பொங்கலன்று குடும்பத்தவருடன் சேர்ந்தமர்ந்து உண்ணும் அரிய நிகழ்ச்சியை அண்ணா தவறவிடுவதில்லை.



ஒரு மனிதன் தன்னிடத்தில் மற்றவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறானோ, எதிர்பாக்கிறானோ அப்படியே இவன் மற்றவர்களிடமும் நடந்து கொள்ளுவதுதான் ஒழுக்கமாகும்.

— தந்தை பெரியார்

1968-ஆம் ஆண்டு இறுதியில் அண்ணா சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று திரும்பினார். சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றிருந்த போதும், அண்ணா மிகவும் மெலிவாகவே காணப்பட்டார். குளிர் சாதன வசதி செய்யப்பட்ட காரில் பயணம் செய்ய வேண்டும் என்றெல்லாம் அமெரிக்க மருத்துவர்கள் ஆலோசனை தெரிவித்திருந்தனர். அதை எல்லாம் புறக்கணித்தார் அண்ணா. பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றார். காஞ்சி பொங்கல் மலருக்கு வரிந்து வரிந்து கட்டுரைகள் - கடிதங்கள் தீட்டினார்.

1969-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் நாள் பொங்கல் திருநாள் வந்தது. அண்ணா வழக்கம் போல் தமது குடும்பத்தவர் அனைவருடனும் அளவளாவியபடி பொங்கல் விழாவினைக் கொண்டாடுவதற்காக சென்னையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு வந்திருந்தார். வழக்கம்போல் தாயார், துணைவியார், வளர்ப்பு மக்கள், மருமகள்கள்அனைவருடனும் அமர்ந்து அளவளாவினார்.

சாப்பாட்டு நேரம் வந்தது. அனைவரும் அமர்ந்து உண்பதற்குத் தயாராயினர். இலைகள் போடப்பட்டன. அண்ணா இலையின் முன் வந்து அமர்வார் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர் ஒரு நாற்காலியில் அமர்ந்தவாறே, ''என்னால் சாப்பிட முடியாது! சர்க்கரைப் பொங்கலை நன்றாகக் கரைத்து ஒரு தம்ளரில் கொடுங்கள்'' என்று கூறினார்.

அண்ணாவின் தாயாரும் மற்றவர்களும் இந்த வார்த்தையைக் கேட்டு வியப்படைந்தார்கள்.

''பொங்கலைக் கரைத்துக் குடிப்பதா? இது என்ன புது வழக்கம்'' என்று அண்ணாவின் தாயார் கேட்க, ''கட்டியாக இருந்தால் என்னால் அதை விழுங்க முடியாது'' என்று அண்ணா பதிலளிக்க, அந்தப் பதிலைக் கேட்டு அனைவரும் கலங்கினர்.

சில விநாடிகளில் சர்க்கரைப் பொங்கலை பாயசம்போல் கரைத்து ஒரு தம்ளரில் ஊற்றி அண்ணாவிடம் வழங்கினார்கள்.

அதனை வாங்கிய அண்ணா ஆர்வத்துடன் வாயிலே ஊற்றினார்; ஆனால் அதை விழுங்க முடியாமல் திணறினார். மிகுந்த தொல்லைக்கு ஆளானார். ஒரு வாய் விழுங்குவதும், மறுவிநாடி கண்கலங்குவதும், தவிப்பதும், பெருமூச்சுவிடுவதும் - இப்படியாக அண்ணா அன்று பட்ட சிரமத்தைப் பார்த்த அவரது குடும்பத்தினர் அனைவரும் கலங்கிவிட்டார்கள். கரைத்த பொங்கலைக்கூட அண்ணா அருந்த முடியாமல் தவித்தார்; துடிதுடித்தார். அவரது தவிப்பு, எதிரே இருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்துவிட்டது. அவ்வளவு சிரமப்பட்டாலும் கூட அந்தப் பொங்கலை வேண்டாம் என்று ஒதுக்கவில்லை அண்ணா. ஆண்டுக்கு ஒருமுறை இல்லத்தவருடன் இனிதமர்ந்து அருந்தும் பொங்கலாயிற்றே! அதனை வேண்டாமென்று ஒதுக்க அவரது உள்ளம் எப்படி ஒப்புக் கொள்ளும்! அதனால் உடல் உபாதையைக் கூடப் பொருட்படுத்தாமல், அரைமணி நேரம் செலவிட்டு ஒரு தம்ளர் சர்க்கரைப் பொங்கலையும் அருந்தினார். அன்று அவர்பட்ட சிரமம், அனுபவித்த துன்பம், தவித்த தவிப்பு, துடித்த துடிப்பு இன்னும் என் கண்களையும் நெஞ்சத்தையும் விட்டு அகலாது நிலைத்து நின்று, எனது உள்ளத்தில் துன்ப அலைகளைத் தினமும் உருவாக்கிக் கொண்டே இருக்கிறது.

அண்ணாவுடன் ஒரே ஒருநாள் பழகியவர்கள் கூட அவரை எந்த நாளும் மறக்க முடியாது! இது வரலாறு வடித்துத்தரும் உண்மை!




பொருளைத் திரட்டுவதே மனைக்குரிய தலைவன் செயலாகும். வருவாய் குறைந்தால் செலவைக் குறைக்க வேண்டும். தனக்கு வரும் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கை வயதான காலத்தில் நுகர்வதற்குரிய சேமநிதியாக வைத்திருக்க வேண்டும். மேலும் அப்பொருள் உடற்பிணி போக்குவதற்கும் மக்கட்கு மணம் செய்வதற்கும் பயன்படும்.

இன்றே சிறுசேமிப்பில் முதலீடு செய்து உங்கள் வருங்கால வாழ்க்கையை ஒளிமயமாக்குங்கள். உங்கள் வாழ்வில் வளம் பெறப் பல நல்ல திட்டங்கள் சிறுசேமிப்பில் உள்ளன.

★ தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு
★ தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு 1987
★ பொது சேமநலநிதி
★ மாதாந்திர வருமானத் திட்டம்
★ விவசாயிகள் சேமிப்புப் பத்திரம்
இந்திரா சேமிப்புப் பத்திரம்
★ அஞ்சலகக் குறித்தகால வெளியீடு
அஞ்சலகத் தொடர்வைப்புத்திட்டம்/
வளரும் மாத சேமிப்புத் திட்டம்

## மாவட்ட சிறுசேமிப்பு பரிசுக்கூப்பன் திட்டம் — 90

— ரூ. 500/- முதலீட்டிற்கு ஒரு பரிசுக்கூப்பன்.
— 1.6.90 முதல் 31.12.90 வரை தனிநபர்கள் முதலீடு செய்து மாருதி கார் முதல் 262 பரிசுகளில் ஒன்றை வென்றிடுங்கள். (தமிழகத்தில் முதலீடு செய்பவர்களுக்கு மட்டுமே)
— ஒவ்வொரு ஒரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.
— சென்னை நகரில் ஒவ்வொரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு சிறுசேமிப்பு இயக்குநர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.

● தேசிய சேமிப்புத்திட்டக் கணக்கு-87 ல் (N.S.S-87) முதலீடு செய்து 100% வருமான வரிவிலக்கு ரூ. 40,000/- வரை பெற்றிடுங்கள்.
● தேசிய சேமிப்புப்பத்திரம் 8 ஆம் வெளியீடு/15 ஆண்டு பொதுசேமநல நிதியில் முதலீடு செய்து வருமானவரிச்சட்டம் 88 பிரிவின்படி ரூ. 50.000/வரை 20% வரிச்சலுகை பெறுங்கள்.
● மத்திய அரசுக்கு இணையாக்ச் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கததொகை.
● ரூ. 1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு ★ இக்குறியிட்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும்.

பரிசுக்கூப்பன்கள்
மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கிடைக்கும்.

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை,
143, அண்ணா சாலை, சென்னை-600002.
தொலைபேசி: 840223/846209

# அரசின் அறிவிப்புகள்

# ஆக்கப் பணிகள்

★ தமிழ்நாட்டில் கைத்தறித் துறையில் 1989-ஆம் ஆண்டிற்கு முன்பு ரூ.2 கோடியே 53 இலட்சம் இழப்பு ஏற்பட்டு இருந்தது. கடந்த ஆண்டு (89-90) முதல் ரூ.3 கோடி இலாபம் கிடைத்துள்ளது என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் செய்தியாளரிடம் தெரிவித்தார் (25.7.90).

★ சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகராட்சிகளில்- தாழ்த்தப்பட்ட, மலைவாழ் இனம் உள்பட பெண்களுக்காக 40 தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (29.7.90).

★ கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கென ''ஊரக அடிப்படை வசதி சிறப்புத் திட்டம்'' என்னும் புதிய திட்டத்தை 8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் நிறைவேற்றிட ரூ.75 கோடி செலவிடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (1.8.90)

★ குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைப் பழுது பார்ப்பதற்காக ரூ.2 கோடி செலவிடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (1.8.90).

★ ஊராட்சி ஒன்றியச் சாலைகள்பராமரிப்புக்காக நடப்பாண்டில் தமிழ்நாட்டிற்கு முதல் தடவையாக ரூ.1.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி. மணி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் (3.8.90).

★ காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலையில் சுமார் 8 ஆண்டுகளாக ஓடாமல் இருந்த இயந்திரத்தை உடனடியாக இயக்கும்படி மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் உத்தரவிட்டார் (2.8.90).

★ தமிழ்நாட்டிற்கு வந்துள்ள ஈழத் தமிழ்க் கர்ப்பிணிகளுக்கு, தமிழக மகளிருக்கு வழங்கப்படுவது போலவே ரூ.200 மகப்பேறு உதவியாக வழங்கவும், ஈழ அகதிகளின் குழந்தைகளுக்கு முட்டையுடன் சத்துணவு வழங்கவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது (4.8.90).

★ தமிழ்நாடு ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசுப் பணியாளர், ஆசிரியர் மற்றும் அவர்களுடைய வாரிசுகளுக்குத் திருமணக் கடன் உதவி 27.6.89 முதல் உயர்த்தி வழங்கிட தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதன்படி, முன்பு ரூ.1,500 திருமணக் கடனாகப் பெற்ற அரசுப் பணியாளர்கள் ரூ.3 ஆயிரமும் இதுவரை ரூ.3 ஆயிரம் பெற்றவர்கள் ரூ.5 ஆயிரமும் கடனாகப் பெறுவர்.

★ தமிழகத்தில் சமூக நலத்துறையின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட உடல் ஊனமுற்றோருக்கான தனியார் சிறப்புப் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம் செய்வதில், உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை அளிக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார் (6.8.90).

★ பட்டதாரி அல்லாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 5 மதிப்பெண்கள் கூடுதலாக வழங்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பிறப்பித்த உத்திரவால், சட்டக் கல்லூரி மாணவர் தேர்வில் 753 மாணவர்கள் பயன் பெற்றனர்.

★ சிதம்பரம் அருகிலுள்ள சேத்தியாத் தோப்பில் ரூ.28 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய சர்க்கரை ஆலையை முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார் (9.8.90).

★ மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அறிவுரைப்படி, தென்னார்க்காடு மாவட்டம் முழுவதும் புதிய சாலைகள் அமைக்கவும் சாலைகளைப் பராமரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும், இப்பணிக்காக ரூ.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் அறிவித்தார் (9.8.90).

★ மாதம் ஒன்றுக்குத் தமிழகத்தில் இரண்டு அல்லது மூன்று தொழிற்சாலைகள் தொடங்கப்படுகின்றன என்றும், தமிழகத்தில் தொழில் வளர்ச்சிப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்றும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார் (9.8.90).

★ தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்யம் பகுதியில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (டிட்கோ) தமிழ்நாடு பெட்ரோபுராடெக்ட்ஸ் நிறுவனமும் இணைந்து ரூ.65 கோடி முதலீட்டில் நாளொன்றுக்கு 100 டன்கள் உற்பத்தித் திறன் கொண்ட காஸ்டிக் சோடா தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது (11.8.90).


சத்துணவுத் திட்டத்திற்காக 1990-91ல் ரூ173 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ.195 கோடி ஒதுக்கத் திட்டம்.
நம்ம குழந்தைங்க கவலையில்லாமப் படிக்க, அரசு அள்ளி அள்ளிச் செலவழுறாங்க பாரேன்!
ஏறிக்கிடுங்க!
அரசு
விவசாயிகள்
கடன் நிவாரணம்
விவசாயக் கடன்
விவசாயிகளுக்கு ரூ.500 கோடி அளவில் கடன் நிவாரணம் அளிக்கப்படுகிறது.
ஒன்றா இரண்டா...
மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி போன்ற தொழில் முறைக் கல்லூரி களில் சேரும் பட்டதாரியல்லாத குடும்பத்தைச் சேர்ந்த முதல் மாணவருக்கு 5 மதிப்பெண்கள் அதிகமாகத் தரப்படுகின்றன.
நம்ம வீட்டுல பட்டதாரி இல்லேங்கற குறையை அரசு தீர்த்துட்டது!



அரசு தந்த சலுகையால் நம் கவலை நீங்கியதுங்க!
அரசுக்கு நன்றி சொல்லணும்!
நெல் வியாபாரிகளிடம் வசூலிக்கப்பட்டு வந்த லெவி 50 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.
காவல் துறை அதிகாரிகள், பொது மக்கள் மீது சந்தேகத்தின் பேரில் வழக்குத் தொடரும் முறை ரத்து செய்யப்பட்டதால் ஆண்டுக்கு ஒரு லட்சம் பேர் வீண் தொல்லையிலிருந்து விடுபட வழி கிடைத்துள்ளது.
பயப்படாதீங்க! உங்கள் பாதுகாப்புக்கு அரசு உத்தரவிட்டுள்ளது!
எடுத்துச் சொல்ல!
சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் ஆகியவற்றால் கட்டப்பட்டுள்ள 50 ஆயிரம் குடியிருப்புகளில் வாடகைக்குக் குடியிருப்போருக்கு அந்த வீடுகளைத் தவணைமுறையில் சொந்தமாக்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**TNPSC** **விளம்பர எண். 30/90**

தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்புப் பணியில் ஆண்கள் சீர்திருத்தப் பள்ளிகளின் கண்காணிப்பாளர் (Superintendent of Boys Approved Schools in the Tamil Nadu Approved Schools and Vigilance Service) பதவி ஒன்றுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 1-10-1990 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்**:—மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000
(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்வுக்குப் பொருந்தாது)

**வயது** :—1-7-90 அன்று 35 வயதிற்குக் குறைவாக.
(சலுகைகள் பற்றிய விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.)

**Qualifications :** I (*a*) A first oı Second Class B.A., or B.Sc., or B.Com. degree or B.O.L. of Annamalai University or B.B.A. of Madurai-Kamaraj University or B.Litt. of Madras University or a Diploma in Criminology and Forensic Science.

*and*

(*b*) B.T., or L.T., oı B.Ed., degree.

II. Must be not less than 160 centimetres in height and 79 centimetres round the chest on full expiration and must have a chest expansion of not less than five centimetres.

*Note :* Preference will be given to destitute widows who posses the prescribed qualifications and who secure atlest the minimum marks for selection.

*Explanation* 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

**சலுகைகள் :** ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

**விண்ணப்பப்படிவமும்**, நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1-9-1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூ. 10) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் ( State Bank of India ) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1-9-1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' ( Demand Draft ) யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26x12 செ. மீ.). அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2131/MS/90/MCS.

# மாவட்டச் செய்திகள்






## திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில்

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், மரங்கள் குறைந்த காடுகளில் காடுகளை மேம்பாடு அடையச் செய்யும் வகையில் மிகக் குறைந்த நேரத்தில் அதிக அளவு மரங்களை மிகப்பரந்த பரப்பளவில் வளர்த்திட வானூர்தி மூலம் விதை தூவி மரங்கள் வளர்த்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்த நிலப்பரப்பில் 3-ல் 1 பங்கு காடுகளாக இருத்தல் வேண்டும் என்ற நியதி இருந்தபோதிலும், இந்தியாவைப் பொறுத்தமட்டில் 4-ல் 1 பங்கிற்குக் குறைவாகவே காடுகள் உள்ளன. அதிலும் தமிழகத்தில் 6-ல் 1 பங்கு தான் காடுகளாக உள்ளது. இதில் 3-ல் 1 பங்கு, பேரளவிற்குத் தான் மலைக் காடுகள், அதாவது மரங்கள் இல்லாத பாறைகளாக உள்ளன.

இந்நிலையை அகற்றிட வேண்டும் என்ற அடிப்படையில், காட்டு வளத்தைப் பெருக்கிட குறைந்த மனித சக்தியில் குறைந்த காலகட்டத்தில் காடுகளை வளர்த்திட வானூர்தி மூலம் விதை தூவும் திட்டம் சோதனைக்காகப பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1950-ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசம், குஜராத் போன்ற மாநிலங்களில் வானூர்தி மூலம் விதை தூவப்பட்டது. சரியான பலன் கிடைக்கவில்லை. 1984-ஆம் ஆண்டில் வடஆர்க்காடு மாவட்டத்தில் இம்முறை கையாளப்பட்டது. மழையின்மையால் போதிய அளவு பயன் கிடைக்கவில்லை.

1989-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் பழனி மலைப் பகுதிகளைச் சேர்ந்த ஒட்டன்சத்திரம் பகுதிகளில் 25 ஆயிரம் எக்டேரில் வானூர்தி மூலம் விதை தூவப்பட்டது. இப்பகுதிகளில் சிறந்த முறையில் எதிர்பார்த்த பலன் கிடைத்துள்ளதால் இந்த ஆண்டு சிறுமலைப் பகுதியில் இத்திட்டம் கையாளப்படுகிறது. நிச்சயம் வெற்றி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விதைகள் இரண்டு மூன்று மாதங்கள் தொடர்ந்து மழையில்லாவிட்டாலும், அடுத்துப் பெய்கின்ற மழைக்கு முளைத்திடும் வகையில் விதைகள் பக்குவப்படுத்தப்பட்டுள்ளன.

**இந்தியாவிலேயே தமிழகத்தில், அதிலும் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் வானூர்தி மூலம் விதை தூவும் திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.**

சிறுமலைப் பகுதிகளில் வானூர்தி மூலம் விதை தூவும் விழா, திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு. சக்திகாந்ததாஸ் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது அவர் பேசுகையில்,**

''வானூர்தி மூலம் விதை தூவி காடுகள் வளர்க்கும் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் சிறந்த வெற்றி பெற்றுள்ளது என்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

''கடந்த ஆண்டு ஒட்டன்சத்திரம் பகுதிகளில் உள்ள காடுகளில் இம்முறையைப் பயன்படுத்தி சிறந்த வெற்றி பெற்றுள்ளோம். அதனடிப்படையில்தான் சிறுமலை மற்றும் கன்னிவாடி மலைப் பகுதிகளில் 2 ஆயிரம் எக்டேரில் மரங்கள் வளர்ச்சி விதைகள் தூவப்படுகின்றன. இத்திட்டமும் கடந்த ஆண்டைப் போல் மிகச் சிறந்த வெற்றியைக் கொடுக்கும் என நம்புகிறேன். இத்திட்டம் வெற்றி பெறப் பொதுமக்களின் பங்கும் நிறைய உண்டு. எனவே, காடுகளை அழிப்பதைத் தவிர்த்து மரங்களை நட முன்வர வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில், கூடுதல் ஆட்சியர் டாக்டர் அருள்மொழி, திட்ட அலுவலர் திரு. அசோக்ரஞ்சன் மொகந்தி, கோட்ட வன அலுவலர் திரு. கந்தசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவிற்கு வருகைதந்த அனை வரையும் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட வன அலுவலர் திரு. பிரகாசம் வரவேற்றுப் பேசினார். கன்னிவாடி வனச் சரக அலுவலர் திரு. கந்தசாமி நன்றி கூறினார்.

**எம். அண்ணாமலை**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்.**

பெண்களுக்கு ரூ.46 ஆயிரமும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 81 பேருக்கு ரூ.3 இலட்சத்து 52 ஆயிரமும், தாட்கோ மூலம் ரூ.76 ஆயிரத்து 800 மதிப்புள்ள 24 கறவை மாடுகளையும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில், ''எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு தமிழ்நாட்டில் மட்டும் கல்விக்காக ரூ.1.42 கோடி கூடுதலாகச்செலவு செய்யப்படுகிறது. பெற்றோர்கள்

எம்.எல்.ஏ. உள்பட பலர் பேசினார்கள். விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் பிச்சாண்டி, திரு. ஏ. ராஜேந்திரன், திரு. பெ.சு. திருவேங்கடம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலையில் நடந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, திருவண்ணாமலை ராஜராஜன் தெருவில் உள்ள நகரசபைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கூடத்துக்கு ''அமராவதி முருகையன்'' என்ற பெயரை மாண்புமிகு



## திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில்...

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் 9.8.90 அன்று, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க.அன்பழகன் அவர்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

தானிப்பாடியில் ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்புள்ள ஆரம்பப்பள்ளி கூடுதல் கட்டடம், ரூ. 1 இலட்சத்து 55 ஆயிரம் மதிப்புள்ள கால்நடை மருந்தகம், ரூ.44 ஆயிரம் மதிப்புள்ள சங்கு ஒலிப்பான் ஆகியவற்றை 9.8.90 அன்று திறந்து வைத்தார்.

மேலும் இவ்விழாவில், திருமண உதவித் திட்டத்தின்கீழ் 5 பெண்களுக்கு 25 ஆயிரமும், மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் 230 கர்ப்பிணிப்

பிள்ளைகளுக்குக்கல்வி கற்க ஊக்கம் அளிக்க வேண்டும். என்னதான் ஆசிரியர்கள் திறமையாக இருந்தாலும்கூட பிள்ளைகளுக்குக் கருத்து வளம் மேம்பட்டால்தான் ஆசிரியர்கள் அளிக்கும் கல்வி பயன் அளிக்கும். பெற்றோர்கள் பிள்ளைகளின் நடைமுறைகளைக் கவனித்து ஒழுங்குபடுத்த வேண்டும்'' என்றார்.

மேலும் இவ்விழாவில், இந்தியன் வங்கி சார்பில் 56 பேருக்குக் கறவை மாடு வளர்க்கும் திட்டத்தின்கீழ் ரூ.1 இலட்சத்து 78 ஆயிரத்து 800-ம், ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 3 பேருக்கு ரூ.21 ஆயிரமும், மளிகைக் கடை வைக்க 3 பேருக்கு ரூ.15 ஆயிரமும், 1084 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களும் இவ் விழாவில் வழங்கப்பட்டன.

முன்னதாக, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ.கோலப்பன், இ.ஆ.ப., தண்டராம்பட்டு பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்.சி. ராமசாமி கவுண்டர், பொன்முடி

கல்வியமைச்சர் அவர்கள் சூட்டினார். அதே பள்ளிக் கூடத்தில் ரூ.3½ இலட்சம் செலவில் கட்டப்பட்ட 4 வகுப்பறைகள் கொண்ட கட்டடத்தையும் திறந்து வைத்தார். இந்த விழாவில் கர்ப்பிணிப் பெண்களுக்கான நிதி உதவியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார். மற்றும் இந்தியன் வங்கி, திருவண்ணாமலை பஜார் கிளை சார்பில், 72 பேருக்கு ரூ.4 இலட்சத்து 49 ஆயிரம் கடன் உதவியும் வழங்கப்பட்டது.

போளூர் சாலையில் உள்ள மத்தியப் பேருந்து நிலையத்தில் ரூ.20 இலட்சம் செலவில் 9 புதிய கடைகளையும், ஒரு சிற்றுண்டி விடுதியையும், சைக்கிள் நிறுத்தும் இடத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

வீராகுட்டைத் தெருவில் புதிதாகக் கட்டப்பட உள்ள நகராட்சி ஆரம்பப் பள்ளிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டிப் பேசுகையில், ''தமிழ்

நாட்டில் உள்ள பள்ளிக் கூடங்களைப் பழுது பார்க்க ரூ.8 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 439 புதிய பள்ளிக் கூடங்கள் திறக்கப்படும்'' என்றார்.

இந்த விழாக்களில், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பெ.கோலப்பன் இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாவில் கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெ.சு. திரு வேங்கடம், போளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.இராஜேந்திரன், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் திரு. பிச்சாண்டி, தண்டளம் பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன்முடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**– ஜீ. மணிகுமார்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.**



## தருமபுரி மாவட்டத்தில்....

**த**ருமபுரி மாவட்டத்தில் மகளிர் பொருளாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, மத்திய அரசால் மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டு மாநில அரசின் மூலமாக இத்திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமாகும்.

மகளிர், வருவாய் ஈட்டத்தக்க வகையில், தொழில்களைத் தேர்வு செய்து, இத்திட்டத்தின் கீழ் புகுத்தப் பட்டுள்ளது. அத்தோடு அந்தந்தக் கிராமங்களில் எளிதில் கிடைக்கக் கூடிய பல்வேறு சேவைகளையும் மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் பயனாளர் பெறக்கூடிய வகையில் ஒரு அமைப்பாக உருவாக் கப்பட்டுள்ளது.

மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அமைப்பு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:

1. குழு அடிப்படையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கடன் தொகையை வழங்குவது.

2. 15 முதல் 20 வரையில் மகளிரைத் தேர்வு செய்து, குழுவாக அமைப்பது.

3. குறைந்த கால அளவில் குறைந்த அளவு தொழில் செய்யும் மகளிரை முழு நேரத்தில் ஈடுபடுத்திக் கூடுதலாகப் பொருள் ஈட்டக் கூடிய வகையில் மகளிர்களை ஈடுபடச்செய்வது.

4. குழந்தைகளின் இறப்பு, நோய் மற்றும் நோய்வாய்ப்படுதலைக் குறைத்தல்.

5. தாய் இறப்பு மற்றும் நோய் வாய்ப்படுதலைக் குறைத்து அவர்களின் நலனை மேம்படுத்துதல்.

இத்திட்டத்தின் துவக்க ஆண்டில் (1983-84இல்) தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி காவேரிப்பட்டிணம் ஆகிய இரண்டு வட்டாரங்களில் மட்டும் 20 குழுக்கள் கொண்டு, தலா 10 குழுக்கள் வீதம் செயல் படத் துவங்கியது. பின்னர் 1989-90 வரையில் இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு, வட்டாரத்திற்கு 30 குழுக்கள் வீதம் 16 வட்டாரங்களில் மொத்தம் 540 குழுக்கள் அமைக்கப் பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. 540 குழுக்களிலும் 67 விதமான தொழில்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பயனாளர்கள் தங்களது தொழிலுக்கேற்றவாறு மாதத்திற்கு ரூ.400 முதல் ரூ.1,000 வரை வருமானம் ஈட்டுகின்றனர்.

மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டக் குழுவில் தயார் செய்யும் பொருட்களுக்கு விற்பனைத் தொடர்பு, தமிழ்நாடு கிராமம் மற்றும் குடிசைத் தொழில் வாரியம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியம் மற்றும் மாவட்டத் தொழில் மையத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனங்கள், மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டக் குழுவிற்குத் தேவையான தொழில் அடிப்படை வசதி மற்றும் துணை நலப் பணிகளுக்குமான வசதிகளை அளித்து, தக்க துணை புரிந்து வருகின்றன.

ஆண்டு வருமானம் ரூ. 4,800 க்கும் குறைந்த அளவு ஈட்டும் குடும்பத்திலுள்ள நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட அடிப்படையில் கடன் மான்யம் அளிக்கப்பட்டு, குழுவாக அமைக்கப்

படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், பயன் பெறும் குழுக்களுக்கு மத்திய அரசு, மாநில அரசு மற்றும் யூனிசெப் நிறுவனம் ஆகியவை சமப் பங்கில் ரூ. 15,000 சுழல் நிதியாக வழங்குகின்றன. இத்தொகை குழுவிற்குத் தேவையான மூலப்பொருட்கள் வாங்குவதற்கும் விற்பனை வசதிக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு குழு அமைப்பாளருக்கு மதிப்பூதியம் ரூ. 50 மிகாமல் மாதத்திற்கு அளித்து ஓராண்டிற்கு வழங்கப்படுகிறது. குழுவின் அடிப்படை வசதிக்காகவும், வருமானம் ஈட்டும் தொழிலை மேம்படுத்தும் நடவடிக்கைக்காகவும் இத்தொகை பயன்படுத்தப்படுகிறது. குழந்தைகள் நலத்திற்காக ஒரு முறைச்செலவினமாக இத்தொகை செலவிடப்படுகிறது. மேலும் ஒவ்வொரு குழு அமைப்பாளர்களுக்கும் மத்திய அரசு, மாநில அரசு, நிதியாக ஆண்டிற்கு ரூ.200 பயணப்படி வழங்குகின்றன

மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் வட்டாரங்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் மொத்தம் பதினொன்று பல்நோக்கு சமுதாயக்கூடம் ஊரக நில மற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடங்களைக் கட்டுவதற்குச் சுமார் ரூ 2.00 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இம்மையக் கட்டடங்கள், குழு உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் கிராமத்தில் உள்ளோரின் எழுத்தறியாமையைப் போக்கவும், குழந்தைகளின் சுகாதார நலனைக்காக்கவும் உற்பத்தி செய்த பொருட்களைப் பாதுகாப்பாக வைக்கவும், கட்டடத்திலேயே பொருட்களை உற்பத்தி செய்யவும், கருத்தரங்கு, தொழில் பயிற்சி, முதியோர் கல்வி வகுப்பு மற்றும் சுகாதார நலப்பணிகளுக்கான முகாமிற்காகவும் இக்கட்டடங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின்படி, மிளகாய்த் தூள், சாம்பார்ப்பொடி தயாரிக்கும் தொழில்கள் நூல்ஹள்ளி கிராமத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் குறித்து, மகளிர் குழு அமைப்பாளர் திருமதி சம்பூரணம் அவர்களைச் சந்தித்தபோது, அவர் கூறினார்:

"இந்தக் கிராமத்தில் பதினைந்து உறுப்பினர்கள் கொண்ட மிளகாய்த்



தூள் தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இக்குழுவில் பத்து உறுப்பினர்கள் உள்ளனர். இக்குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் வங்கி மூலமாக ரூ.4500 கடன் தருகின்றனர். இதில் மானியமாக ரூ.1500 வழங்குகின்றனர். மேலும் எங்களது குழு உறுப்பினர்கள் மூலம் மாதந்தோறும் 900 கிலோ வரை மிளகாய்ப் பொடி, சாம்பார் பொடி உற்பத்தி செய்கின்றோம். மேலும் இம்மாவட்டத்திலுள்ள சத்துணவுக் கூடங்கள், தமிழ்நாடு



நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களுடன் விற்பனை வசதிக்காக இணைக்கப்பட்டுள்ளன.

"மேலும் சுழல் நிதியாக ரூ.12,500 இக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. கடன் தொகையிலிருந்தும், சுழல் நிதியிலிருந்தும் ரூ.22,000 மதிப்பிற்காக அரவை இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முன் சிலமகளிர்கள் விவசாயக் கூலிகளாகவும் வேலை செய்து சரிவர வருமானம் இன்றி இருந்தனர். தற்போது இவர்கள் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடன் தொகை பெற்ற பின்னர், மாதத்திற்கு ரூ.500 வரை வருமானம் ஈட்டுகின்றனர்."

இத்திட்டத்தின் கீழ் ரெடிமேட் ஆடை (ஆயத்த ஆடை) தயாரிக்கும் தொழில் பென்னாகரம் வட்டத்தில் முள்ளுவாடி கிராமத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இத்திட்டம் பற்றி மகளிர் குழு அமைப்பாளர் திருமதி ஜுனத் அவர்கள் கூறியதாவது:

"மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இக்கிராமத்தில் இஸ்லாமியப்பிரிவைச் சார்ந்த 20 பேர் உள்ளனர். இவர்களுக்குப் பென்னாகரம் இந்தியன் வங்கி மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.6,000 கடன் வழங்கப்பட்டு, கடன் தொகை முழுவதும் 10 உறுப்பினர்கள் திருப்பி செலுத்தியுள்ளனர். கடன் தொகையில் ரூ.4000 கடன் தொகையாகவும், ரூ.2000 மானியமாகவும் வழங்கப்படுகிறது.

நாங்கள் இத்திட்டத்தின் மூலம் பாவாடை, கிராமப் பெண்கள் பயன்படுத்தும் சிறு பைகள், பள்ளிச் சிறார்களுக்கான இலவசச்சீருடைகள், சுடிதார், பைஜாமா, கவுன்கள், சிறிய குழந்தைகளுக்கான ஆடைகள் ஆகியவற்றைத்தயார் செய்து, அவைகளை உள்ளூரிலும், உள்ளூர்ச் சந்தைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இத்திட்டத்திற்கு உறுப்பினர்களுக்கு எந்த விதமான வருமானமும் இன்றி இருந்தவர்கள், தற்போது சராசரியாக மாதம் ஒன்றுக்கு ரூ.450 வருமானம் ஈட்டுகின்றனர்."

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் காவேரிப் பட்டிணம் வட்டாரம், அகரம் கிரா மத்தில் மண்பாண்டம் தயாரிக்கும் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது:

இத்திட்டம் பற்றி மகளிர் குழு அமைப்பாளர் திருமதி பழனியம்மாள் அவர்கள் கூறினார்.-

''இக்கிராமத்தில் பத்து உறுப் பினர்கள் அடங்கிய குழுவாகமண் பாண்டம் தயாரித்து விற்று வரு கிறோம். எங்கள் ஒவ்வொருவருக் கும் கடன் தொகையாக ரூ.7,500, மானியமாக ரூ.2,500 பெற்றோம். நாங்கள் பானை, மாந்தொட்டி, கழுநீர் தொட்டி, பூந்தொட்டி மற்றும் அடுப்பு ஆகியவைகள் தயார் செய்து, காரிமங்கலம், நாரசம்பட்டி, அரசம் பட்டி மற்றும் கம்பைநல்லூர் வாரச் சந்தைகளில் விற்பனை செய்து வருகிறோம். ஒரு சிலர் பொம்மைகள் செய்யும் தொழிலும் செய்து வருகின் றனர்.

எங்கள் குழுவிற்குச் சுழல் நிதி யாக ரூ.12,500 வழங்கப்பட்டது. இத்தொகையினை லாபம் ஈட்டித் தரும் தொழில்களுக்குப் பயன் படுத்தி வருகிறார்கள். இத்திட்டத் திற்கு முன்னர் உறுப்பினர்களுக்கு ரூ.150-200 வரை மாத வருமானம் கிடைத்தது. தற்போது மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பின்னர், இக்குழு உறுப்பினர்களுக்கு மாதம் ரூ.750 மாத வருமானம் கிடைக்கப் பெறுகிறது''.

இத்திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்தில் 9,520 பெண்கள் பயன்பெற்று, அவர்களைச் சார்ந்த குடும்பங்களும் பயன் பெற்று வரு கின்றன

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மகளிர் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், நல்ல பல திட்டங்களைத் தீட்டி, சிறப் பாகச் செயலாற்றி வருகிறார். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தருமபுரி மாவட்டத்தில், நலிந்த பெண்கள் மேன்மையுற மகளிர் மற்றும் குழந் தைகள் மேம்பாட்டுத் திட்டம், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கா.அலாவுதீன் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத் திட்ட அலுவலர் திரு. ஆர். அழகிரிராஜ் அவர்களின் நிர்வாகத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**–சி.சு. சரவணன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**தருமபுரி**

## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்...

**தி**ருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், இலங்கையிலிருந்து இதுவரை 589 குடும்பங்களைச் சார்ந்த 2,174 அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களின் இன் னல்களைப் போக்குகின்ற வகையில் மாவட்ட நிர்வாகம், அகதிகள் தங்கு வதற்குப் பல்வேறு வசதிகளை உரு வாக்கித் தந்துள்ளது.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் நாரணம்மாள்புரம், தருவை, பெருமாள்புரம், தென்காசி, சங்கரன்கோவில், சமூகரெங்கபுரம், திருக்குறுங்குடி ஆகிய 7 இடங்களில் பல்வேறு குழுக்களாகத் தங்க வைக் கப்பட்டுள்ளனர். மொத்தமுள்ள 2,174 அகதிகளில், 1,097 ஆண் களும், 1,077 பெண்களும் அடங்கு வர். சிறுவர்கள் மட்டும் 677 பேர் உள்ளனர்.

இவர்களின் அடிப்படைத் தேவை யான உறைவிடம், உணவு ஆகியவை சீராக வழங்கப்பட்டு வருகின்றன. இவர்கள் சமையல் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் உடைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.இராசரெத்தினம், இ.ஆ.ப., அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க. சமூக அமைப்புகளும், ரோட்டரிச் சங்கங்களும், பல்வேறு வியாபாரத் தொழில் அமைப்புகளும் வழங்க முன் வந்தன. மாதந்தோறும் பெரிய வர்கள் நபருக்கு ரூ.150-ம், சிறுவர் களுக்குத் தலா ரூ.75 வீதமும் அரசு ரொக்கப் பணமாக வழங்கி வரு கிறது.

இவர்களுக்குக் குடும்ப அடை யாள அட்டை வழங்கப்பட்டு, மானிய விலையில் அரிசி கிலோ 0.57 காசுக்குக் கொடுக்கப்படுகிறது.

மேலும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தில்





**மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள், 'காதிகிராப்ட்' பொம்மைக் கண்காட்சி மற்றும் விற்பனையைச் சென்னை குறளகத்தில் துவக்கி வைத்தார் (20.8.90).**

மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அகதிகளின் புணி மற்றும் தொழில் முறைகள் கணக்கிடப்பட்டு அவர்களுக்கு விவசாயப் பண்ணை, அரிசி ஆலை, பீடிக் கம்பெனி ஆகிய இடங்களில் பணிபுரிவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தினமும் அரசு மருத்துவக்குழு, முகாமிற்குச் சென்று பார்வையிட்டு வருகிறது.

மேலும் அகதிகளின் குழந்தைகள் கல்வி பயில்வதற்காக அகதிகள் முகாம் அருகே உள்ள பள்ளிகளில் 238 குழந்தைகள் கல்வி கற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அகதிகளின் வாட்டம் போக்கிட, தமிழ்நாடு அரசு எடுத்திடும் ஆக்கப்பூர்வமான பணியினைத் தருவை முகாமில் உள்ள திரு. பிரீஸ் அவர்கள், 'தமிழக அரசு தங்களது தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வருவது கண்டு மனநிறைவு கொள்வதாகத் தெரிவித்தார்.

இலவச வேட்டியைப் பெற்றுக கொண்ட திரு.வடிஸ், முகாமில் தங்களுக்குத் தேவையான வசதிகள் யாவும் செய்யப்பட்டு வருவது குறித்து மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்களிடம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

நாரணம்மாள்புரம் முகாமிலுள்ள திரு.ஜெபமாலை அவர்கள், "அகதிகளுக்குத் தமிழக அரசு செய்து வரும் உதவிகளைக் கூறப்போனால் அது ஒரு காவியமாக மாறிவிடும்" என்று கூறினார்.

"இலங்கையில் பல்வேறு இன்னல்களுக்குட்பட்டுள்ள எங்களது சகோதரர்களை அழிவிலிருந்து மீட்டுத் தர அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்" என்று தருவை முகாமிலுள்ள அகதி திரு. செல்வம் கோரிக்கை விடுத்தார்.

அகதிகளுக்கு அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ள நிலைமைகளைக் கண்டறிய மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், அகதிகள் மறுவாழ்வு சிறப்பு ஆணையாளர் திரு. சி. என். ராமதாஸ் இ.ஆ.ப., ஆகியோர் முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டனர். மாவட்டத்தின் பல்வேறு தனியார் அமைப்புகளையும், நிறுவனங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தொடர்பு கொண்டு பெருமளவில் இவர்களுக்கு உதவிட வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து அகதிகளின் அனைத்துத் தேவைகளும் தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**— எஸ்.எம். பஷீர்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்**

## கடல் அரிப்பைத் தடுக்க புதிய முறை

அலைகள் மோதுகின்ற கடற்கரையில், கான்கிரீட் பாளங்களை அருகருகே வைத்துச் சரிவான நிலையில் கடற்கரைச்சுவர் ஒன்றை உருவாக்கியுள்ளனர். அலைகள் எல்லை மீறிச் செல்லாதவண்ணம் இந்தத் தடுப்புச்சுவர் பாதுகாக்கிறது.

இதில் மற்றொரு புதுமை என்னவெனில், இந்தத் தடுப்புச்சுவரில் பயன்படுத்தப்பட்டுள்ள கான்கிரீட்டில் 30 சதவீதம் சாம்பல் உள்ளது. இது சாக்கடைக்கழிவை எரிப்பதன் மூலம் தயாரிக்கப்பட்டதாகும்.

அமெரிக்காவில் வர்ஜீனியா மாநிலத்தில், செஸ்பீக் வளைகுடா பகுதியில் இந்தப் புதுமையான தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய தொழில்நுட்பத்தினால் ஒரேசமயத்தில் இரட்டைப் பயன்கள் விளைகின்றன. கடல் அரிப்பையும் தடுக்க முடிகிறது; அதே சமயத்தில், கழிவுப் பொருட்களால் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்காதபடி, அவை புதிய பொருளாக மாற்றப்பட்டு ஒரு நல்ல காரியத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

## இராமநாதபுரம் மாவட்டத்தில்...

மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் மண்டபம் முகாமை 22.7.90 அன்று சுமார் 2 மணி நேரம் சுற்றிப் பார்த்தார். அகதிகளைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

பிறகு மண்டபம் அகதிகள் முகாமில் மேதகு ஆளுநர் அவர்கள் செய்தியாளர்களுடன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

''அகதிகள் முகாமில் உள்ள குழந்தைகள் பெரியவர்களைச் சந்தித்து அவர்கள் கூறியவற்றைக் கேட்டேன். அரசு அகதிகளுக்குச் செய்து வரும் உதவிகள் மனநிறைவு அளிக்கிறது. அகதிகளின் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூட வசதி செய்து தரப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்களுக்கு உயர் கல்வியும் அளிக்கப்படும்; சலுகை விலையில் அரிசி, துணிகள், பாத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

''அகதிகளைப் பராமரிப்பது மற்ற உதவிகள் செய்வது மிகச் சிரமமான பணி. இந்தப் பணியைத் தமிழக அரசு சிறப்பாகச் செய்து வருகிறது.

''கவுரிமுத்து என்ற இளம் பெண் 1986-ஆம் ஆண்டு குண்டு வீச்சில் 2 கால்களையும் இழந்துள்ளதைப்பார்த்தேன். அவருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்படும். மேலும் அந்தப் பெண்ணுக்குத் தேவைப்பட்டால் சென்னைக்கு அனுப்பி சிகிச்சை செய்ய ஏற்பாடும் செய்யப்படும்''.

அகதிகள் முகாமை, மேதகு ஆளுநர் அவர்களுக்கு, மறுவாழ்வுத் துறை இயக்குநர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அர. செல்லமுத்து, இ.ஆ.ப. ஆகியோர் சுற்றிக்காண்பித்தனர்.

## இளம்பிள்ளைவாத நோய்த்தடுப்பு மற்றும் மறுவாழ்வுப்பணிகள்

இராமநாதபுரம் மாவட்டத்தில், இளம்பிள்ளைவாத நோய்த்தடுப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் தமிழ் நாட்டில் முன்னோடித் திட்டமாக ஒவ்வொரு கட்டமாக 5 கட்டங்களில் 1988-89-லிருந்து துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்ட நபர்களின் மருத்துவ, கல்வி, தொழில் மற்றும் பொருளாதார உதவிகளைப் பெறுவதற்காக, மதிப்பீட்டுக் குழுக்கள் மூலம் மதிப்பீடு செய்து, அவரவர்களுக்குத் தேவையான உதவிகள் அளித்துவரப்படுகின்றன.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு 1989 ஜனவரி முதல் 1990 மார்ச் வரை செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 40 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 8,933 பேருக்கு ஊனமுற்ற நபர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் முதற் கட்டத்தில் பரமக்குடி, போகலூர், நயினார் கோவில் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 3 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் இளம்பிள்ளைவாத நோய்த்துடைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 3 ஊராட்சி ஒன்றியங்களில், பாதிக்கப்பட்ட 400 நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவ, சமூக, பொருளாதார உதவிகளை வழங்குவதற்காக மருத்துவக் குழுவை அமைத்து, ஊராட்சி ஒன்றியத்தில் 5 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட இலவச மறுவாழ்வு உதவிகள்:

1) 50 நபர்களுக்கு இலவச அறுவைச் சிகிச்சை செய்து கால் சரி செய்யப்பட்டது. 2) 225 நபர்களுக்கு காலிப்பர்கள் (காலுறைகள்) வழங்கப்பட்டன. 3) 130 நபர்களுக்கு அவர்களுடைய ஊருக்கே சென்று உடற் பயிற்சி மருத்துவம் அளிக்கப்பட்டது. 4) 40 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்பட்டது. 5) 25 நபர்களுக்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. 6) 16 நபர்கள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். 7) 58 பள்ளி மாணவ, மாணவியருக்குக் கல்வி உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. 8) 98 பள்ளி மாணவ மாணவியருக்குக் கல்வி உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. 9) 22 நபர்களுக்கு நபருக்கு ரூ.300 உதவித் தொகையுடன் 6 மாதத்திற்குச் சுயதொழில் பயிற்சி அளிக்கப்பட்டது. 10) 18 நபருக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் 7 நபர்களுக்கு மாதம் ரூ.100 வீதம் 10 ஆண்டுகளுக்குப் பராமரிப்பு மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஊனமுற்ற 270 மாணவ, மாணவியருக்கு, கல்வி உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

—உல. இரவீந்திரன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம்

# ஆனைமலையின் காடர் பழங்குடிகள்

டாக்டர் நே. தேவசகாயம்
மானிடவியல் காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், சென்னை

**ஆனைமலைக் காடர்கள் யார்? அவர்கள் வாழ்க்கை, நாகரிகம் எப்படிப் பட்டது என்பதை விளக்கும் அரிய கட்டுரை இது. நம் காலத்தில், நம்மோடு வாழும் பழங்குடி மக்களைப் பற்றிய இந்தக் கட்டுரையில் பல புதிய செய்தி களைத் தெரிந்து கொள்கிறோம்.**

ஒரு காலத்தில் யானைகள் அதிகமாகக்காணப்பட்ட கோவை மாவட்ட யானை மலை/ஆனை மலைக் காடுகளில் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் பழம் பெரும் பழங்குடிகளின் பெயரே, காடன்-காடர் (KADAR) என்றாகியது. பொள்ளாச்சி வட்ட மலைகளின் இருபகுதிகளான வால்பாறை, மற்றும் டாப் சிலிப் (TOP SLIP) பில் சுமார் 2,000 காடர் பழங்குடிகள் காட்டு மலைச்சரிவுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

டாப்சிலிப் பகுதியில் மலைப் பேருந்திலிருந்து நாம் இறங்கியவுடன் நம்மை இனிதே வரவேற்பது வனவிலங்குச் சரணாலயமாகும். புல்லினால் மூடப்பட்ட சிறுகுன்று போலுள்ள இம்மேட்டில், மூன்று பக்கக் காடுகளிலிருந்து புள்ளி மான்கள் கூட்டமாக தினமும் அதிகாலையில் மேயவரும் காட்சியைச் சுமார் 45 நிமிடங்கள் இங்கு வரும் உல்லாசப் பயணிகள் கவனிக்கத் தவறுவதில்லை. இரவில் பயணிகள் விடுதியின் அருகிலேயே பைசன் காட்டெருமை (Bison) நடமாடுவதும் அவைகளின் கண்கள் தீயைப் போன்று சிவந்திருப்பதும் இங்கு நாம் காணத்தகும் எழில்மிகு காட்சிகளில் ஒன்றாகும். ஆனால் பகலில் காட்டில் காணக்கூடியவை, நாம் பார்க்க் கூடியவைகள் யானைகள் தான்.

இந்த விலங்கியல் சுற்றுலாக் காட்சிகளைத் தவிர, மானிடவியலார் விரும்பிச் சொல்வது, இந்த வனப்பான காட்டிலே, காடுகளின் நடுவிலே எளிய வாழ்க்கையை நடத்தும், நடத்திக் கொண்டுவரும் காடர் என்பவரைப் பற்றியேதான். தமிழ்நாட்டின் 42 பழங்குடியினரில் இவர்கள் சாதாரணப் பழங்குடிகள் அல்ல! தங்களின் பூர்வீக, பாரம்பரிய கலாச்சாரத்திலே பிறந்து வளர்ந்த இப்பழங்குடிகள் நாளடைவில் தங்கள் சுற்றுப்புறங்களில் ஏற்பட்ட மாறுதல்கள், மாற்றங்கள் மற்றும் தங்களைக் கவர்ந்த வெளிப்பண்பாட்டினால் ஏற்பட்ட கரைகளினால், தங்களின் எளிய, சுத்தமான பாகுபடுத்தப்பட்ட பண்பாடுகள் சிறிது சிறிதாக மறைந்து போவதைக்கண்ட மானிடவியல் பிரிவின் சென்னை அருங்காட்சியகம், அச்சிதைவுகளை நினைவுபடுத்தக்கூடிய, அம்மக்களின் அரும் பொருள்களை ஓரளவு சேகரித்து அவைகளின் வழியே ஒருங்கிணைந்த அம்மக்களின் மூலப் பண்பாட்டைத் திரும்பவும் விளக்கக்கூடிய முயற்சியே, கடந்த ஆண்டில் மூன்று நாட்களாக ஆனை மலையை நோக்கி எடுத்த பொருள் சேகரிப்பு ஆய்வுப் பயணமாகும்.

**காடர்**



டாப்சிலிப்பிலிருந்து எருமைப்பாறை என்ற காடரின் கிராமம் சுமார் 1½ கல் தொலைவில் பரம்பிக்குளம் செல்லும் பேருந்து சாலையின் அருகில் மலைச்சரிவில் அமைந்துள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மலைச்சரிவின் பகுதியில் இரண்டு பெரிய பாறைகள் எருமையைப் போல இருந்ததாகவும், அவைகளை உடைத்து அவ்விடத்தில் 200 ஆண்டுகளுக்கு முன்னர் தமது முன்னோர் குடியேறியதாகவும் அப்பகுதி காடர் கூறுகின்றனர்.

தென்னிந்தியப்பழங்குடியினர் மொத்தமாக புரோட்டோ ஆஸ்திரலாயிட் (Proto-australoid) என்ற இன வகையைச் சார்ந்தவராயினும், குறிப்பாக



காடர் நெருப்பு உண்டாக்குதல்

தயாராக உள்ளார் என்பது அறிகுறி. இது இவர்களின் அழகை அதிகப்படுத்தும் செயல் என்றும், கூரிய முன்பற்களை வைத்தால் கொடிய விலங்குகளைப் போன்று இருப்பதாகவும் இம்மக்கள் நினைக்கின்றனர். டாப்சிலிப் மலைப்பகுதியில் எருமைப்பாறை கிராமத்தின் காடர்களை இந்த சமூகச் சடங்கைப் பற்றிக் கேட்டபோது, இந்தப் பழக்கம் தற்சமயம் மறைந்து வருவதாகவும், இக்காலக் காடர் இதைப் பின்பற்றுவதில்லை என்றும் கூறினர். இச்சடங்கு கடந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நினை வூட்டுவதாக அமைந்துள்ளது.

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், சுமார் ஐம்பது வயது நிரம்பிய ஒரு காடர், இரவில் தீக்கழியுடன் தனது குடிசையைவிட்டு, இயற்கையின் கடனைக்கழிக்கச்சென்றதாகவும், அருகில் புதரில் பதுங்கியிருந்த புலி ஒன்று அவரை அடித்துத் தூக்கிச் சென்று விட்டதாகவும்,

பல மாதங்கள் கடந்தும் அவரைப் பற்றிய தகவல்/துப்பு கிடைக்கவில்லை என்றும், ஒரு ஆண்டு கழித்து, தண்ணீரைத் தேடி, காடர் மக்கள், தூரத்திலுள்ள ஒரு பள்ளத்தாக்கிற்குச் சென்றதாகவும், அங்கு ஒரு மண்டை ஓடு இருந்ததாகவும், அது யாருடையது? என்று அடையாளம் காண முயன்றபோது, அந்த மண்டையின் முன்தாடையில் செதுக்கப்பட்ட பல் இருந்ததைக் கண்டு, இது தங்கள் காடர் வகுப்பைச் சேர்ந்தவர்தான் என்பதைக் கண்டு பிடிக்க முடிந்தது என்றால், இந்த விதமாகப் பல்லைச் செதுக்குதல் சடங்கின் முக்கியத்துவம் எப்படிப்பட்டதுஎன்று நாம் ஓரளவு அறிய முடியும்.

மற்றொரு சிறப்பு அறிகுறி, திருமணச் சடங்கில் ஆடவன் ஒருவன், அழகான வேலைப்பாடான, ஐந்து முள்ளைக் கொண்ட, 4 முதல் 6 அங்குல நீளமுள்ள மூங்கில்

காடர் பழங்குடியினர் தங்களுக்குள் நீக்கிராயிட் (Negroid) இனவகைக்குரிய அறிகுறிகளைக் கொண்டுள்ளனர். முக்கியமாக தடித்த உதடு, கட்டையான உருவம், கருமைநிறம், தலைமுடி சுருட்டினது போன்றவையாகும்.

தென்னிந்தியா ஆஸ்திரேலியாவுடன் நிலப்பரப்பில் ஒன்றாக இருந்த அக்காலத்தில் காட்டுமிராண்டித்தனத்தையும் சற்று குறைந்த நாகரீக பண்பாட்டையும் கொண்ட இருவகை நீக்கிரோ இன மக்கள் இந்தியாவில் குடியேறினதாகவும், ஏற்கெனவே நிரந்தர்பூர்வீகப் பழங்குடிகள் இம்மக்களைக் கண்டு, காடுகளுக்கும், மலைகளுக்கும் ஓடிச் சென்றனர் என்றும், புதுமுகப் பழங்குடிகள், குமரி முதல் விசாகை, மற்றும் நாக்பூர் வரை பரவி வாழ்ந்தனர் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால் இக்கூற்றிற்கு மாறாக, வேறுவகை ஆய்வாளர்கள் காடர் பழங்குடிகளே, இந்தியாவின் முதுமை பூர்வீகப் பழங்குடியினர் என்று கூறுகின்றனர். அந்தமானின் நீக்கிரோ இனத்தவரைப் போன்ற கோவை மாவட்ட ஆனை மலை காடர், காட்டில் உணவைச் சேகரித்தும், வேட்டையாடியும், இறந்தவர்களைப் புதைத்தும், முன்பற்களைவெட்டியும், தங்கள் எண்ணிக்கையில் நாளடைவில் குறைந்தும் வருகின்றனர்.

எதுவாயினும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இவர்களின் இனவகையிலும், சமூகப் பொருளாதார வாழ்க்கையிலும் முக்கிய இடத்தைப் பெற்றவர்களாக இருக்கின்றனர்.

இம்மக்களை சிறப்பினவர்களாகக் காட்டிய அறிகுறிகள் யாவை? காடர் பழங்குடிகள் தங்கள் இருபாலரும் வயதிற்கு வந்தவுடன் தங்களின் மேல், கீழ்த் தாடைகளின் முன்பற்களை (Incisor teeth) கூரிய உளி கொண்டு செதுக்கி விடுதல் பழக்கமாக இருந்து வந்தது. இப்படிப்பல் செதுக்கப்பட்டிருந்தால் தான் அவள்/அவன் திருமணத்திற்குத்

## அரசுத் தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம்

சென்னை உட்ஸ் சாலையில் இயங்கி வந்த அரசுத் தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம், மின் உரிமம் வழங்கும் வாரியம், மின் ஆய்வாளர்/சென்னை அலுவலகம் மற்றும் அண்ணாசாலையில் உள்ள மின்சார வாரிய வளாகத்தில் இயங்கி வந்த அரசு மின் தர நிர்ணய ஆய்வுக்கூடம் ஆகிய அலு வலகங்கள் 11.6.90 முதல் கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டையில் கட்டப்பட்டுள்ள மின் ஆய்வுத் துறையின் புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

சீப்பைத் தானே தயாரித்து, தான் மணக்கவிருக்கும் மங்கைக்கு அன்பளிப்பாக அளிப்பதாகும். இதைக் காடர் மகளிர் தலையின் முன்பக்கத்தில் சுருட்டை மயிரில் அணிவர். முதுவர் பழங்குடிகளிடமும் இன்றும் காணப்படும் இப்பழக்கம், காடர்களிடம் இன்று காணப்படவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்வரை இவர்களின் முதியோர் பலர், சிக்கிமுக்கிக் கற்களின் உதவியால் தீயை உண்டாக்கியதாகக் கூறப்பட்டது. நெல்லை, குமரிமாவட்ட காணிப் பழங்குடிகளைப் போன்றே, காடர்கள் சிக்கி முக்கிக் கற்களினால் நெருப்பை உண்டாக்குவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பஞ்சு, காய்ந்த இலைகளை வைக்க காணிப்பழங்குடிகள், சிறிய மூங்கில் பெட்டிகளுக்குப் பதிலாக, காலப்போக்கில் தகர ப்வுடர் டப்பாக்களில் போட்டு வைக்கின்றனர். சிறிய பிலிண்ட் (Flint) கல்லை இடது கை விரலில், வலது கை விரலினால் ஒரு தட்டையான சிறிய இரும்புத் துண்டினால் உரசித்தட்டி, தீயை மூட்டுவர். கை விரல்களின் இடையே வைத்துள்ள பஞ்சு, காய்ந்த இலைத்துண்டுகளில் தீப்பொறிகள் பட்டு, நெருப்பு உண்டாக்கப்படுகிறது. இப்பழக்கம் நாளடைவில் மறைந்துள்ளது.

எறுமைப்பாறை கிராமத்தில் சுமார் இருபது கூரை வீடுகளில் காடர் வாழ்ந்து வருகின்றனர். முற்காலத்தில் பெட்டிபோன்ற அமைப்புடைய மூங்கிலினால் முற்றுமாகக் கட்டப்பட்ட வீடுகள் தற்போது காணப்படவில்லை என்றாலும், சாதாரண, எளிய குடிசைவீடுகள் முக்கோண வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இக்குடிசைகளின் கூரை **இத்தாயி** (Ithai) எனப்படும் கொடியின் இலைகளால் மூடப்படுகிறது. சில சமயங்களில் தேக்குமர இலைகளும் கூரைக்கு உதவுகின்றன. காடரின் இத்தகைய கூரைவீடுகள் மலைச்சரிவில் ஆங்காங்கே சற்றுத்தள்ளி, தனித்தனியே



**காடர்கள்**

அமைக்கப்படுகின்றன. வீட்டைச் சுற்றிலும் புல், செடிகள் அகற்றப்பட்டு, அவ்விடங்கள் கொத்தப்பட்டு, மரவள்ளி, சர்க்கரைவள்ளி, மாவட்டக் கிழங்கு, காவாத்துக் கிழங்கு, பப்பாளி,பலா, மாமரம், கொய்யா, யூக்கலிப்டெஸ் ஆகிய மரங்களும் நடப்படுகின்றன. இவ்விதமாகத் தனித்தனியே குடிசைகளை அமைத்தலும், வீட்டைச் சுற்றிய நிலத்தில் சிறு தோட்டங்களை அமைப்பதும், நெல்லை, குமரி மாவட்டக் காணிப்பழங்குடிகளைப் போன்றே காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இவ்விதமாக "நிழலின் பார்வையில் பயிரிடுதல்" முக்கியமாக உணவைச் சேகரிக்கும் பழங்குடிகளிடம் காணப்படுகிறது.

காடர்களின் முக்கிய பணி, உணவைக் காடுகளில் சேகரிப்பதாகும். மரம்,செடி, கொடிகளை வெட்ட உபயோகிக்கும் முக்கிய வெட்டும் கத்தி - மண்டைக் கத்தியாகும். இதன் மரப்பிடி கேரளத்தின் தழுவலைப் பின்பற்றியதாக காணப்படுகிறது. மற்றொரு கத்தி, கொக்கிரக் கத்தி- இது நீண்ட கழியுடன் இணைக்கப்பட்டுள்ளது. மூன்றாம் கத்தி- கோல்வடிக் கத்தியாகும். இது தோண்டும் கத்தி (Digging Stick) அல்லது கொத்து வகையைச் சார்ந்ததாகும். நீண்ட கழியின் ஒரு நுனியில் தட்டையான இரும்புக் கத்தியை இணைத்து, காடர் மகளிர் காட்டிற்குச் சென்று, காட்டுக் கிழங்குகள், வேர்கள், தண்டுகள் ஆகியவைகளைப் பூமியிலிருந்து தோண்டி எடுப்பர். இவைதவிர, காடுகளில் கிடைக்கும் கொட்டைகள், தேன், மெழுகு, இஞ்சி, மஞ்சள், குங்கிலியம் ஆகியவைகளையும் சேகரித்து அவற்றை டாப்சிலிப் பகுதியிலுள்ள தூணக்கடவு மலை வாழ் பழங்குடிகளின் பொருள் வாணிபக் கூட்டுறவுக் கழகத்திற்குக் (Hill Range Co-operative Marketing Society) கொடுத்து தினக்கூலியைப் பெறுவர்.

காட்டுப் பொருள்களைச் சேகரிப்பதில், முக்கியமாகத் தேனைக் காட்டு மரங்களிலிருந்து சேகரிப்பதில் காடர்கள்

## குடும்ப நலத்திட்டம் பின்பற்றுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

குடும்ப நலத் திட்டங்களைப் பிரபலமாக்குவதற்காக நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள் நல்ல பலனை அளித்துள்ளன. அறுவைச் சிகிச்சை, கருத்தடை மாத்திரைகள், உறைகள் போன்றவற்றைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை முதல் ஆறு மாதங்களில் 1.80 கோடியாக அதிகரித்துள்ளது. இது 7.81 சதவிகித அதிகரிப்பாகும்.

கருத்தடை உறைக்கான சமூக விற்பனைத் திட்டத்தின் கீழ் 1988 டிசம்பர் முதல் 1989 பிப்ரவரி வரை 91.73 மில்லியன் நிரோத் உறைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கருத்தடை மாத்திரைகளின் விற்பனையும் 10.50 இலட்சத்திலிருந்து 14.44 இலட்சமாக உயர்ந்துள்ளது.

இந்தியத் தொழில் நுட்பத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஐம்பது சதவீத காப்பர் டி சாதனங்களை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்க வேண்டும் என்று சுகாதாரம்-குடும்ப நலத்துறை அமைச்சகம் தீர்மானித்துள்ளது.



## இனிக்கும் செய்தி

ஆண்டொன்றுக்குச் சர்க்கரை உற்பத்தி செய்வதில் உலக நாடுகளிலேயே இந்தியா முதலிடம் வகிக்கிறது. இவ்வாண்டு மே மாதம் 15-ஆம் தேதி வரை 101.64 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்து உலகச் சாதனை படைத்துள்ளது.

இந்தியா தனது சென்ற ஆண்டின் சாதனையான 91.10 இலட்சம் டன்னை முறியடித்து 16.51 இலட்சம் டன் கூடுதலாக உற்பத்தி செய்துள்ளது.

இந்தியா தவிர உலகில் அதிகமான சர்க்கரை உற்பத்தி செய்யும் பிரேசில் நாட்டின் 1983-ஆம் ஆண்டின் சாதனை 88.44 இலட்சம் டன் மட்டுமே.

இவ்வாண்டின் கூடுதல் உற்பத்திக்கு முக்கிய காரணம் அரசினால் அதிகமாகச் சாறுபிழியும் கரும்பாலைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஊக்கத் தொகையே ஆகும்.

இந்தப் புதிய சாதனை படைத்தமைக்காக மத்திய உணவு, பொது விநியோகத் துறை அமைச்சர் திரு. நாதுராம் மிர்தா அவர்கள், சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்டியுள்ளார்.

அடுத்த பருவத்தில் விரைவில் சாறு பிழிவதற்கான ஊக்கத் தொகையை அரசு ஏற்கெனவே அறிவித்துவிட்டது.

---

வல்லுநர்கள். மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களில் இவர்கள் தேனைச் சேகரிக்கின்றனர். தேன் கூடு இருக்கும் மரத்தில் ஏறுவதற்கு ஆறு அங்குலம் நீளமுள்ள மூங்கில் பத்தைகளை ஒரு முனையைக் கூர்மையாகச்செதுக்கி வைத்து, அவற்றை ஒவ்வொன்றாக மரத்தின் தண்டில் வலப்புறம், இடது புறமாக மாற்றி மாற்றி அடித்து இறக்கி, அவைகளைப் படிக்கட்டுகளாகப் பயன்படுத்தி, தங்கள் கால்பாதங்களை மாறிமாறி அவைகளில் வைத்து மரத்தில் உயர ஏறுவர். இம்முறையை இன்னமும் காடர் பின்பற்றுகின்றனர். தேனைச் சேகரிக்க உபயோகித்த மூங்கில் பாத்திரங்களை இன்று தங்களது உணவுப் பொருள்களைச் சேகரித்து வைக்கும் குடுவைகளாக அல்லது அளவைகளாக அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

பயிர்த்தொழிலில் ஈடுபட இவர்களுக்கு விருப்பம் இல்லை. ஏனென்றால், முயல், நரி, காட்டுப்பன்றி, யானை போன்ற விலங்குகள் பயிர்களை மற்றும் தங்களது தோட்டங்களை நாசப்படுத்தி விடுவதாகக் கருதுகின்றனர். இன்னும் ஒரு சிலர் உண்டை வில்லை (Pellet Bow)யை வேட்டையாடப் பயன்படுத்துகின்றனர்.

டாப்சிலிப்பில் மலைவாழ் சிறுவர்களுக்கெனப் பள்ளி அமைக்கப்பட்டுள்ளது. காடரின் மொழி, தமிழும், மலையாளமும் ஆகும். இறந்தவர்களைப் புதைக்கின்றனர். பேய், பிசாசுகளில் நம்பிக்கை உண்டு.

கொத்தும் கருவியுடன் காடர்ப் பெண்



மறைந்து வரும் காடர்களின் மேற்குறிப்பிட்ட சிறப்பு அறிகுறிகளை என்றும் நினைக்கத்தக்கவகையில் அவர்களின் மூங்கிற் பொருட்கள் (தேன் சேகரிக்கும் பாத்திரம், கூடை, பாய், தட்டு, சீப்பு) மற்றும் கத்திகள், முக்கியமாகத் தோண்டும் கொத்து, சிக்கி முக்கிக்கல், உண்டைவில் ஆகிய ஒரு டஜனுக்கு மேற்பட்ட அரும்பொருள்களை, அருங்காட்சியக இயக்குநரின் மேற்பார்வையின்கீழ், (பொள்ளாச்சி டாப்சிலிப் பகுதியில் பயணத்தில் கிடைத்தவை) கடந்த பிப்ரவரி மாதம் அமைக்கப்பட்ட, கோவை மாவட்ட அருங்காட்சியகத்தில் 'டையோரமா' (diorama) காட்சிப் பெட்டியில், வண்ண ஒளிப்படங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.



# பார் உய்யப் பாடிய பாவேந்தர்

— டாக்டர் அ. முத்துசாமி

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞர்களுள் தலைசிறந்தவர் பாவேந்தர் பார்திதாசன். 'புரட்சிக்கவிஞர்' எனவும், 'பா்வேந்தர்' எனவும் போற்றப்பெறும் பாரதிதாசன் 40600 அடிகள் பாடியுள்ளதாகக் கணக்கிடுவர். இவர்தம் பாடல்களில் கருத்து உண்டு; கற்பனை உண்டு; உணர்ச்சியுண்டு; ஒப்பற்ற வடிவம் உண்டு; புதுமையுண்டு; புரட்சியுண்டு; எளிமையும் இனிமையும் உண்டு. சுருங்கக்கூறின், பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்கள் கற்பவர்களையும் கேட்பவர்களையும் நன்னெறிப்படுத்தும் கருத்துக் கருவூலங்களாகத் திகழ்கின்றன எனின் மிகையாகாது.

**நிறைவாழ்வு வாழக் கல்வி வேண்டும்**

உலக மாந்தர் அனைவரும் அறியாமை நீங்கி அறிவுடையவராகத் திகழக் கல்வி மிகமிக இன்றியமையாததாகும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த பாரதிதாசன் கல்வி கற்றவரே முழுமையான வாழ்வை எய்துவர் எனவும், மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றார். இவ்வுண்மையினை,

''கற்க எவரும், எக்குறை நேரினும்
நிற்காது கற்க, நிறைவாழ்வு என்பது
கற்கும் விழுக்காடு காணும், பெண்கள்
கற்க! ஆடவர் கற்க! கல்லா்ர்
முதிய ராயினும் முயல்க கல்வியில்''

என உணர்த்துகின்றார்.

**பொல்லாங்கினை விட்டொழித்திடல் வேண்டும்**

இவ்வுலகில் நல்லவர்களிடையே நயவஞ்சகர்களும் நிறைந்துள்ளனர். இத்தகையோர் கற்றனவும் கேட்டனவுமாகிய அறக்கருத்துக்கள் அவர்தம் மனத்தடாகங்களைப் பண்படுத்தியதாகப் புலப்படவில்லை. இவர்களனைவரும் தாம் கற்றனவற்றையும் கேட்டனவற்றையும் சுயநலம் காரணமாகக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு மனிதசமுதாயத்திற்குக் கேடு சூழ்வதையே குறியாகக் கொண்டுள்ளனர். குறிப்பாகத் தமிழரே தமிழினத்தவர்க்குத் தீங்கு செய்வதைக் கண்டு மனம் வெதும்பிய பாவேந்தர்,

''தாய்நாடாம் தமிழ் நாட்டில்
இருக்கின்றாய் நீ!
புகுந்த நாடல்ல இது! பிறந்த நாடே!
பொல்லாங்கு கனவிலும் எண்ண
வேண்டாம்''

என இடித்துரைக்கின்றார்.

**பொய்யும் புரட்டும் நீங்கப் புரட்சி வேண்டும்**

புரட்சிக்கவிஞரின் புரட்சிக்கீதங்கள் பொய்யையும் புரட்டையும் நையப்புடைக்க வல்லனவாகும். புரட்சி எனும் சொல் தலைகீழ் மாற்றம் என்ற பொருளை உணர்த்தும். மனிதசமுதாயத்தில் ஆண்டாண்டுக் காலமாக நிலவிவருகின்ற தகாத வழிமுறைகளை மாற்றியமைப்பதே புரட்சியாகும். பாவேந்தரின் புரட்சி மனப்பான்மையை,

''ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பாநீ!''

என்னும் பாடலடிகள் பறைசாற்றி நிற்கின்றன. இப் பாட்லடிகள், ஏழை, பணக்காரன் என்ற நிலைமாறிச் சமதர்ம சமுதாயம் அமையவேண்டும் என வலியுறுத்துகின்றன.

''புதியதோர் உலகம் செய்வோம் — கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்''

எனப் பாடுவதும் அவர்தம் புரட்சி மனப்பான்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**பொதுவுடைமைக் கொள்கை போற்றிடல் வேண்டும்**

புரட்சிக்கவிஞர் பொதுவுடைமைக் கொள்கையை வற்புறுத்தியவர். ஏற்றத்தாழ்வற்ற புதிய உலகம் உருவாவதற்குப் பொதுவுடைமைக் கொள்கையைப் பாரெங்கணும் பரப்பிப் பாதுகாத்து வளர்க்கவேண்டும் என மனிதசமுதாயத்திற்கு அறைகூவல் விடுக்கின்றார். இவ்வுண்மையினை,

''பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும்
சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்''

எனும் அவர்தம் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

**சாதிக்குச் சாவுமணி அடிக்கவேண்டும்**

சாதியொழிப்புக்கு வித்திட்டவர்களுள் தலையாயவர் பாரதியார். அவரைப் பின்பற்றி அவர்தம் கவிதாமண்டலத்தைச் சார்ந்த பாரதிதாசன், சாதிப்பாகுபாட்டை மனிதசமுதாயத்திலிருந்து வேரோடு கிள்ளி எறிய வேண்டும் என இயம்புகின்றார்.

''பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல்
மடமை — இந்தப்
பிழை நீக்குவதே உயிருள்ளாரின் கடமை''

எனவும் உணர்த்துகின்றார்.

**கலப்புமணம் பூண்டிட வேண்டும்**

கலப்பில் வளர்ச்சியுண்டு என ஆன்றோர் உரைப்பர். போட்டியும் பூசலும் அற்ற நல்வாழ்வுக்கு வழி வகுப்பது கலப்புமணமே என்பது பாவேந்தர் கண்ட உண்மை.

''கலப்பு மணம் ஒன்றே
நல்வழிக்குக் கைகாட்டி''

எனக் கலப்புமணத்திற்கு வரவேற்பு இசைப்பது அவர்தம் சீர்திருத்த மனப்பான்மையைத் தெற்றெனக் காட்டுகின்றது.

**செம்மண் நிலமும் பெய்தமழையும்போல் சேர்ந்திட வேண்டும்.**

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் உள்ளத்தால் ஒன்றுபடுவதைச் செம்புலப் பெயல் நீரார் என்ற சங்கப்புலவர்,

''யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே''

எனப் பாடுகின்றார். இப்பாடலின் சிறப்பினை எண்ணியெண்ணி இன்புற்ற புரட்சிக்கவி, பாமரரும் அறிந்து கொள்ளும் வண்ணம் அதனை,

''என் தாய் யாரோ
உன் தாய் யாரோ — பெண்ணே,
என் தந்தை உன் தந்தை உறவினர் அல்லரே!
இன்று இங்கே உனை எவ்வாறு அடைந்தேன்?
நீ என்னை எவ்வாறு அறிந்தாய்? — நாம்
செம்மண் நிலமும் பெய்த மழையும் போல்
சேர்ந்தோம் அட்டா இன்பம் ஆர்ந்தோம்
இருண்ட நெஞ்சில் வீறிட்ட காதலே
இருவரையும் சேர்த்தது இவ்வையம் மீதே மருண்ட
மக்கள் மாப்பிள்ளை பெண்களை
மனத்தில் கூட்டுவ தாக எண்ணுவார்.''

என எளிமைப்படுத்தி இனிமையாகப் பாடுவது அவர்தம் கவிப்புலமைக்குச் சிறந்த சான்றாகும்.

**தமிழின் பெருமை**

பாவேந்தர் தமிழ் மொழியைச் சிறப்பித்துப் பாடியுள்ளதைப்போல் வேறு எவரும் பாடவில்லை என்றே கூறலாம். தமிழ்மொழியை அமுதம் என்றும், உயிருக்கு நிகரானது என்றும் குறிப்பிடுவது அதன்பால் அவருக்குள்ள பற்றினை எடுத்துக்காட்டுகின்றது.

''தமிழுக்கும் அமுதென்று பேர் — அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!''

எனவும்,

''கனியிடை ஏறிய சுளையும் — முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் — காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் — தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும், — தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!''

எனவும் அன்னைத் தமிழைப் பாவேந்தர் பாரதிதாசன் புகழ்ந்தேத்துகின்றார்.

**அழகின் சிரிப்பு**

நீலவானில் பவனிவரும் நிலவுப் பெண்ணின் எழில்மிகு காட்சியை,

''நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை!
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ!''

எனப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

பாவேந்தர் பாரதிதாசன் தான் உணர்ந்த கருத்தை - ஒப்பற்ற கருத்தை - உலக மாந்தரும் உணர்ந்து உய்ய வேண்டும் எனும் நன்னெஞ்சம் படைத்தவர். அவர்தம் நன்னெஞ்சத்திலிருந்து பெருக்கெடுத்த கவிதைக் கடலில் மூழ்கி வாழும் நெறியறிந்து வாழ்வாங்கு வாழவேண்டியது ஒவ்வொருவரின் கடமையுமாகும்.



என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்
பராக்கிர மத்தால் அன்பால்
உன்னத இமமா மலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட் டிடல்எந் நாளோ?

வளரும் வேளாண்மை:

# பவர்டில்லரால் இயங்கும் கருவி

**ப**வர்டில்லர் ஒரு எளிய இயந்திரம். ஒரு டிராக்டர் நான்கு சக்கரங்களைக் கொண்டு செய்யும் பணிகளை இந்தப் பவர்டில்லர் இரண்டே சக்கரங்களின் துணை கொண்டு செய்கிறது. இதனை இயக்குவதற்குச்சிறப்பான திறமையோ, தொழில் நுட்பமோ தேவையில்லை. ஜப்பான், தாய்லாந்து, தென்கொரியா போன்ற நாடுகளில் பவர்டில்லர்களைப் பண்ணைகளில் பெண்களே இயக்கிப் பணிபுரிகிறார்கள். இதனை இயக்குவதற்கு ஓட்டுநர் உரிமம் போன்ற கட்டுப்பாடுகளும் இல்லை. ஆகவே, நமது உழவர்களும் இதனை வெகு விரைவில் எளிதாகக் கற்றுக் கொள்ளலாம்.

இது, நெல் நடவிற்குச் சேறு கலக்கி நிலத்தை மிகச் சிறந்த முறையில் பண்படுத்துவதற்கும், கரும்புப் பயிர் சாகுபடி நிலங்களில் கரும்பு வெட்டிய பிறகு உழுவதற்கும் மிகவும் உபயோகப்படுகிறது. சாதாரணமாக பவர்டில்லருடன் இணைப்புக் கருவிகளாகச் சுழல் கலப்பை, இரும்புக் கலப்பை, கொத்துக் கலப்பை மற்றும் டிரெயிலர் போன்ற கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகி வருகின்றன.

தற்பொழுது பவர்டில்லருடன் இணைத்து இயங்கக்கூடிய பல்வேறு கருவிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் சமப்படுத்தும் மற்றும் வரப்பு அமைக்கும்கருவியும் ஒன்றாகும்.

—திரு கே. கதிர்வேல்
உதவிப் பேராசிரியர்

திரு ஆர். கருணாநிதி
பேராசிரியர் மற்றும் தலைவர்.

திரு டி.வி. ஜாப்,
இணைப் பேராசிரியர்

பண்ணை எந்திரங்கள் துறை,
வேளாண் பொறியியற் கல்லூரி,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்,
கோவை.

இக்கருவியைப் பண்படுத்தப் பட்ட நிலத்தில் உயரமான பகுதியில் உள்ள மண்ணைத் தாழ்வான பகுதிக்குக் கொண்டு சென்று நிலத்தைச் சமப்படுத்துவதற்கும், புன்செய் நிலங்களில் அதிக மழை நீரினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுப்பதற்கும், மண்ணின் ஈரத்தன்மை காக்கப் பெறுவதற்கும் பயன்படுத்தலாம்.

பவர்டில்லரால் இயக்கப்படும் இக்கருவி ஒரு மீட்டர் அகலமுள்ள கெட்டியான இரும்புத் தகட்டினால் உள்நோக்கி லேசாக வளைக்கப்பட்டு உள்ளது. இத்தகட்டின் கீழ்ப்பாகத்தில் மண்ணை வெட்டிச் செல்வதற்கான இரும்புப் பட்டை பொருத்தப்பட்டுள்ளது. இரு பக்கங்களிலும் மண் சிந்துவதைத் தவிர்க்க பக்கவாட்டில் சிறகுகள் இணைக்கப்பட்டுள்ளன. இக்கருவி பவர்டில்லரின் முன்புறம் நான் நிலைப்படுத்தும் கைகளின் மூலம் உறுதியாகப் பொருத்தப்பட்டுள்ளன.

பவர்டில்லரால் இக்கருவி உந்தி முன்னுக்குத் தள்ளப்படும்பொழுது,




பவர்டில்லரால் இயங்கும் சமப்படுத்தும் - வரப்பு அமைக்கும் கருவி

1. பவர் டில்லர
2. சுழல் கலப்பை
3. நிலைப்படுத்தும் கைகள்
4. வெட்டு முனை
5. பக்கவாட்டுச் சிறகு
6. சமப்படுத்தும் தகடு

## அரசின் அரும்பணிகள்

- ★ தொய்வுற்ற தொழில் வளம் சிறப்புறச் செயல்பாடுகள்!
- ★ குனிந்து கிடந்த நிர்வாகம் நிமிர்ந்து நிற்கிறது!
- ★ மகளிர் நல்வாழ்வுக்கு அடுக்கடுக்கான திட்டங்கள், சட்டங்கள்!
- ★ எங்கிருந்து முறையீடு கிளம்பினும் உடனடியாக அதனைக் கவனிக்கும் அக்கறையுடன் அரசுப் பணிகள்!
- ★ கண்ணியமான பரிபாலனம் நடைபெறக் கண்டிப்பான ஆணைகள்! கடுமையான நடவடிக்கைகள்!
- ★ மாணவர்க்குப் பல்வேறு சலுகைகள்!
- ★ அரசு அலுவலர், ஆசிரியர், தொழிலாளர் கோரிக்கை நிறைவேற்றம்!
- ★ ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் எண்ணற்ற பணிகள்!
- ★ கிராமங்களைச் செழிப்புறச் செய்யும் வளர்ச்சித் திட்டங்கள்!
- ★ விவசாயிகள் நலனில் தனி அக்கறை!
- ★ ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மை மக்கள் நலனில் நாட்டம்!
- ★ மதப்போர் - சாதிப்போர் தூண்டி விடுவோர் மீது உரிய நடவடிக்கை!
- ★ அமைதியில் ஆர்வம்!
- ★ அடக்கமான போக்கு!
- ★ இந்திய ஒருமைப்பாட்டிற்கான உரிய நடிவடிக்கை!
- ★ மாநில உரிமைகளை என்றுமே விட்டுக் கொடுக்காத உரிமைக்குரல்!

## நீரிழிவு நோய் போக்கும் வெந்தய மருந்து

நாள்தோறும் உணவில் வெந்தயத்தைச் சேர்த்துக் கொண்டால் நீரிழிவு நோய் கட்டுப்படுகிறது; மாரடைப்பை ஏற்படுத்தும் கொலஸ்ட்ரால் என்னும் இரத்தக் கொழுப்பும் குறைகிறது. வெந்தயம், இரத்தத்தில் கணிசமான அளவு குளுகோஸைக் குறைக்கிறது. சிறுநீரில் சர்க்கரைச் சத்தை 64 சதவிகிதம் வரை குறைக்கிறது.

இந்த உண்மையை ஐதராபாத்தில் உள்ள தேசிய சத்துணவு நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இவர்கள் இரண்டாண்டுகளுக்கு முன்னரேயே வெந்தயத்தின் மருத்துவ குணத்தை ஆய்ந்து தெரிவித்தனர்என்பது குறிப்பிடத்தக்கது.

சூண்சிகிச்சைக்குப் பயன்படக்கூடிய 'சினிராரியா மாரிடிமா' என்னும் ஒமியோபதி மூலிகை நீலகிரி மலைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மத்திய ஆராய்ச்சிக் குழுவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதனைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த மூலிகை இந்தியாவில் வளராது என்ற கருத்து இதுவரை நிலவி வந்தது. அதனால் தாவரத்தின் சாறு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இனி அதற்கு அவசியம் இருக்காது என்று நம்பப்படுகிறது.

இரும்புப் பட்டையினால் வெட்டப்பட்ட மண் சேகரிக்கப்பட்டு, வேண்டிய இடத்திற்குக் கடத்தப்படுகிறது. இக்கருவி, நிலத்தில் செல்லும் ஆழத்தைச் சுழல் கலப்பையின் பின்புறமுள்ள உருளையின் மூலம் கட்டுப்படுத்தலாம்.

**சிறப்பியல்புகள்:**

- மேட்டுப் பகுதியிலிருந்து மண்ணைப் பள்ளத்திற்கு எடுத்துச் செல்ல மிகவும் உதவும்.
- மரச் சட்டம் மற்றும் பல வகையினால் நிலத்தைச் சமப்படுத்துவதை ஒப்பிடும்பொழுது நேரம் மிச்சப்படுவதுடன், நிலம் சீராகச் சமப்படுத்தப்படுகிறது.
- ஒரு கன மீட்டர் மண்ணை ஒரு மீட்டர் நீளத்திற்குக் கடத்த ஆகும் செலவு ரூ.1 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.
- இக்கருவியின் விலை சுமார் ரூபாய் 1,200 மட்டுமே.

மேலும் விவரங்கள் பெற அணுகவேண்டிய முகவரி:

பேராசிரியர் மற்றும் தலைவர்
பண்ணை எந்திரங்கள் துறை
வேளாண் பொறியியற் கல்லூரி
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோவை - 641 003.

—நன்றி: 'செய்தி மடல்'

# தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு

## "உங்கள் கவனத்திற்கு!"

தமிழக அரசாணை எண். 1101/89 நிதி (பரிசுச்சீட்டு) நாள் 6.10.89 மற்றும் அரசுக் கடித எண். 59482/ நிதி (பரிசுச்சீட்டு) நாள் 13.2.90ன் படியும், **தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் பூடான் (உயர்நீதி மன்ற 26.6.90 தேதியிட்ட இடைக்கால ஆணை நிபந்தனைகளுக்கு உட்பட்டு) ஆகிய மாநில பரிசுச் சீட்டுக்கள் மட்டுமே தமிழ்நாட்டில் விற்பனை செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது.**

தமிழக உயர்நீதிமன்றம் தனது 3.5.90 நாளிட்ட தீர்ப்பில் அரசாணையை அங்கீகரித்து **கீழ்க்கண்ட மாநிலங்களின் பரிசுச்சீட்டுக்களின் விற்பனையை தமிழ்நாட்டில் தடை செய்துள்ளது:-**

- டெல்லி
- அசாம்
- கோவா
- மணிப்பூர்
- அரியானா
- மேகாலயா
- மிஜோராம்
- நாகலாந்து
- பஞ்சாப்
- சிக்கிம்
- ராஜஸ்தான்
- அருணாசல பிரதேசம்
- இமாச்சல பிரதேசம்

எனவே மேற்படி பரிசுச்சீட்டுக்களை தமிழ்நாட்டில் விற்பனை செய்வதோ, அவற்றிற்கான விளம்பரத்தை வெளியிடுவதோ, அது குறித்து செய்தி வெளியிடுவதோ, குலுக்கல் முடிவுகள் வெளியிடுவதோ **இந்திய குற்றவியல் சட்டம் பிரிவு 294 - A ன் படி குற்றமாகும். மேற்கண்ட விதிகளை மீறுபவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.**

இயக்குநர்,
தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டுத்துறை
சென்னை-600 001.

DIPR: 2120/MS/90-EFFICIENT




தொண்டனுக்கு ஆக்கம்சொல்லி ஊக்கம் ஊட்டித்
தூயபணி செய்விப்பான் தலைவன்; என்றும்
தொண்டினையே தன்வாழ்வின் முதலாய்க் கொண்டு
தூயபணி செய்பவனே ஆசான்; பாரில்
எண்டிசையும் பேர்மணக்க நேர்மை காட்டி
எல்லோர்க்கும் அறிவூட்டும் திறமை யாலே
பண்டுமுதல் என்றென்றும் அறவோர் போற்றும்
பண்புநிறை வழிகாட்டி அவனே யாவான்.

அன்றன்று மறவாமல் உயர்வை எண்ணி
அறிவுதரும் நூல்களையும் தேடிக் கண்டு
என்றென்றும் சலிப்பின்றிக் கற்கும் தன்மை
இவனைஒரு மாணாக்கன் என்றே செப்பும்.
நன்றென்றும் தீதென்றும் நயமாய்ச் சொல்லி
நாள்தோறும் உய்வதற்கு வழியைச் சொல்லி
என்றென்றும் மாணாக்கர் உயர்வே எண்ணி
இருப்பதனால் அவர்கட்கு அன்னை யாவான்.

படிப்பினிலே மாணவர்க்கு ஆர்வம் ஊட்டி,
படிப்பிக்கும் முறைமையிலே திறமை காட்டி,
துடிப்பான அவர்நெஞ்சில் தூய்மை சேர்த்து,
தூண்டாத மணிவிளக்கின் தன்மை ஏற்றி,
நடிப்பான இவ்வுலகைப் புரிந்து கொண்டு
நயமுள்ள வாழ்வதனைத் தேர்ந்து கொள்ளும்
படிப்பினையை அவர்மனதில் பதிய வைக்கும்
பண்புநிறை அன்பதனால் தந்தை யாவான்.

தீங்குசெய்த போதினிலே இடித்துக் கூறி
தீமைதனை வாராமல் தடுத்துக் காத்துப்
பாங்குடனே வாழ்வதற்கு வழியும் கூறும்
பரிவுமிகப் பெற்றதனால் நண்பன் ஆவான்.
ஆங்காங்கே இருக்கின்ற மூடர் நெஞ்சில்
அறிவுநிறை சொல்லேரால் உழுது, வித்தி
ஓங்கி உயர் களைகளையும் அழியச் செய்து
உலகுயரச் செய்வதனால் உழவன் ஆவான்.

அன்புக்கு ஏங்குகின்ற பிஞ்சு நெஞ்சும்
அறிவுக்கு ஏங்குகின்ற ஏழை நெஞ்சும்
பண்பினிலே மிகஉயர்ந்த ஆசான் தன்னால்
பயன்பெறுவதால் அவனும் வள்ளல் ஆவான்!
என்பினிலே வன்மைபெற்ற ஒரு மா ணாக்கன்
ஏதமிலா ஒருவனைத்துன் புறுத்தக் கண்டு
அன்பினிலே அருகழைத்து அச்சம் ஊட்டி
அன்புமுறை செய்வதனால் மன்னன் ஆவான்.

அவனன்றி ஓரணுவும் அசையா தென்ற
அருள்மிகுந்த சொற்களுக்குப் பொருத்த மாவான்;
தமரென்றும் பிறரென்றும் பாரான்; பாரில்
தனக்குப்பொருள் குவிப்பதற்கும் எண்ணான்; அன்னான்
கவணின்று புறப்பட்ட கல்லைப் போலக்
கலக்கமின்றித் தன்செயலில் ஊக்கம் கொள்வான்;
இவனின்றி இவ்வுலகில் ஏதும் இல்லை;
இவன்புகழே கதிர்உலவும் வானின் எல்லை!

—கவிஞர் அகில். வரதராசன்

நான்காம் அட்டை சொல்லும் செய்தி:



# அள்ளக் குறையாதது கல்விச் செல்வம்

## முதல்வர் கலைஞர்

பல்கலைக் கழக வேந்தர், இந்தியக் குடியரசுத்
துணைத் தலைவர் அவர்களே,
புதுவையின் துணை நிலை ஆளுநர் அவர்களே,
பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களே,
புதுவை முதலமைச்சர் அவர்களே,
அமைச்சர் பெருமக்களே,
ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களே,
மாணவச் செல்வங்களாம் அன்பு உடன்பிறப்புக்களே!

இந்தியத் திருநாட்டின் குடியரசுத் துணைத் தலைவராகவும் புதுவை மையப் பல்கலைக் கழகத்தின் வேந்தராகவும் அறிவுசால் பெருமகனாகவும் எளிமையின் இருப்பிடமாகவும் நாட்டின் தகைமைசால் சான்றோரில் ஒருவராகவும் திகழும் மேதகு சங்கர் தயாள் சர்மா அவர்களின் முன்னிலையில் பட்டமளிப்பு விழா உரையாற்றுவதில் மெத்தவும் பெருமை கொள்கிறேன்.

துடிப்பும் கல்வித் தொண்டாற்றும் ஆர்வமும் கொண்ட துணை வேந்தர் வேங்கடசுப்ரமணியம் அவர்கள் இந்த இரண்டாம் பட்டமளிப்பு விழாவில் நான் கலந்து கொள்ள வாய்ப்பு நல்கியமைக்கு என் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடல் அலைகளின் ஒலியைத் தாலாட்டாகக் கொண்டு உறக்கம் கொள்ளாமல் - எழுச்சியூட்டும் சங்கநாதமாகக் கருதி எரிமலைச் சொற்களால் விடுதலைக் கவிதை உரைத்த பாரதியும் -'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே' - எனத் தோள் தட்டிய பாரதிதாசனும் உலவிய இந்த மண்ணின் பெருமை விண்ணை முட்டி; அதற்கு மேலும் உயர்ந்து நிற்பதாகும். ஆனந்தரங்கம் பிள்ளை, அரவிந்தர் என்ற புகழுக்குரிய பெருமக்களின் பெயர்கள் சொல்லிப் பூரிக்கும் புதுவையில் பாண்டிச்சேரி பல்கலைக் கழகமெனும் இந்த அற்புதப் பாசறையில் படைக் கலன்களாக உருவெடுத்துள்ள மாணவ இளம்பிறைகளாம் வளர் பிறைகள் முழு நிலவுகளாய் ஒளியுமிழ்ந்து நாட்டின் நலனுக்கும் ஒற்றுமைக்கும் சமுதாயச் செழுமைக்கும் பணி யாற்றிடல் வேண்டுமென இந்தப் பட்டமளிப்பு விழாவில் வாழ்த்துகிறேன்.

நீடு துயில் நீக்கப் பாடி வரும் நிலா - காடு கமழ வந்த கற்பூரச் சொற்கோ - எனப் பாரதியைப் பாவேந்தர் பாடிப் புகழ்ந்தது போல், மாணவ சாதியைப் பார்த்து நான் மட்டு மல்ல; நாடே புகழ்ந்திடல் வேண்டும்.

'மாணவ சாதி' என மற்றொரு சாதி படைக்கின்றேன் என வியப்படையாதீர்! இருக்கின்ற சாதி மதச் சழக்குகளால் இருட்டறையில் கிடக்கின்ற இவ்வுலகைத் திருத்தி அமைத்து, 'ஒன்றே குலம் உண்மையே தெய்வம்' என ஆக்குதற்கு வல்லது மாணவ சாதியொன்றே எனும் நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு.

கற்றதனால் ஆய பயன் கண் மூடிப் பழக்கங்களை மண் மூடிப் போகச் செய்வது தானே! பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றிருந்த நிலை மாற்றிட இடையில் எழுந்த சதிக்குக் கால் முளைத்தன்றோ ''சாதி'' என்று ஆயிற்று! அந்தச் சாதி; இளங்குருத்துக்களாம் மாணவர் குழாமிடை யும் ஊடுருவி; சாதிகள் இல்லையடி பாப்பா என்ற சங்க நாதமும் எட்டாத; கேளாக் காதினராய் அவர்களை ஆக்கி விட்டதே என எண்ணும் போது எத்துணை வேதனை! எத்துணை சோகம்!

எனவே சாதிப் பிணக்குகள், மத பேதங்கள் அகற்றி; அனைவர்க்கும் உரிய வாய்ப்புகள் கிடைத்திடத் தக்க சமூக நீதியெனும் கமலம் மலரக் கதிரொளியாகத் திகழ்வோம் என இற்றை நாளில் இளைய சமுதாயம் சூளுரை மேற் கொள்ளுமாக! இது என் விழைவு!

கல்வித் துறையில், சமுதாயத் துறையில் நலிந்திருப் போரை அடையாளங் கண்டு அவர்கட்கு சம வாய்ப்பு உரிமைகளையும், உதவிகளையும் வழங்குவதற்கு மட்டுமே ஒரு கால சுட்டம் வரையில்; சாதி எனும் சொல் புழக்கத்தில் இருக்க அனுமதிக்கலாமே தவிர, அனுமதிக்கப்படும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, சாதிகள் ஒன்றோ டொன்று மோதி, கலாம் விளைப்பதையோ, நாடு அமளிக் காடாக மாறுவதையோ, மனித நேய உணர்வு கொண்டோர் விரும்பிடார் என்பது மட்டுமல்ல; வெறுத்திடவும் தயங்கார்! அத்தகைய புதிய சிந்தனையாளர் பட்டியலில் மாணவர்கள், தங்களை இணைத்துக் கொள்ளாவிடில் பட்டங்கள் பெற்றுப் பயன் என்ன? எனும் கேள்விக்கு விடை, கேலிக்குரியதா கவே கிடைக்குமன்றோ!

---

மேலே உள்ள படத்தில்...

புதுவைப் பல்கலைக்கழக 2-வது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற- மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. சங்கர்தயாள் சர்மா மேதகு புதுவை துணைநிலை ஆளுநர் திருமதி சந்திரவதி, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர், மாண்புமிகு புதுவை முதல்வர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு தமிழ்நாடு-புதுவை மாநில அமைச்சர் பெருமக்கள் மற்றும் புதுவைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு.வேங்கடசுப்பிரமணியம் ஆகியோர்.

---

கல்வி கழனியாகிறது! பயிற்சி உழவாகிறது! அறிவு பயிராகிறது! மணிக்கதிர் மனையை வளமாக்குகிறது! இந்த மாநிலத்தை வளமாக்க மாணவரும் மணிக்கதிர் எனக் குலுங்கிட வேண்டாமோ! இந்தத் தணியாத ஆசையைத் தான் தரங்கம்பாடித் தமிழ் பாடும் கடல் ஆடும் புதுவையிலே வெளியிட்டு, இளைஞர் உலகை வேண்டி நிற்கிறேன்; பல்வேறு தேசிய இனங்களின் உரிமையும், பல்வேறு மொழி, கலாச்சாரம் ஆகியவற்றின் பாதுகாப்பும் தான் இந்திய நாட்டின் வலிமைக்கும் ஒற்றுமைக்கும் அசைக்க முடியாத அரண் என உணர்ந்து செயல்பட முனைவீர் என்று!

பயமறியாப் பருவம் மாணவப் பருவம் - ஏற்றுக் கொள்கிறேன் என் அனுபவச் சுவடுகள் அழிந்து விடாமல் இருப்பதால்! அதற்காகப் பண்பு அறியாப் பருவமாக அமைந்தும், அதற்கேற்ப இயங்கியும், முளை விடும் போதே ''களை'' இது எனக் கழறும் நிலையும் - மொட்டாக இருக்கும் போதே கருகிடும் முடிவும் ஏற்படாமல் காத்துக் கொள்ளும் கடமையும் கட்டுப்பாடும் மாணவச் செல்வங்களுக்கு மிக மிகத் தேவை!

கறுப்பு மனிதன் - ஆனால் நெருப்பு மனிதன் - நெல்சன் மண்டேலா; வாழ்நாளின் வசந்தப் பகுதியை இருபத்தேழு ஆண்டுகள் சிறையிலேயே செலவிட்டுச் சிரித்த முகமுடன் வெளியே வந்தவன்; அவன் மாணவப் பருவத்திலேயே தனது மூதாதையர் வரலாற்றை, அவர்கள் தமது மண்ணுக்காகப் போர் பல நடத்தியதை வீரகாவியங்களாகக் கேட்டு-கேட்டதைச் செவி மடலுடன் நிறுத்திக் கொள்ளாமல் சிந்தையிலும் செப்பேடாகப் பதித்துக் கொண்டதால் தான், இன்று உலகம் அவனை உச்சி மீது வைத்து உவகைக் கூத்தாடுகிறது!

சுதந்திரம் பெற்ற நாட்டில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழுகிறோம். கோணிப்பைக்குள் கால்களை விட்டுக் கொண்டு மிக மெதுவாக நடக்கும் பந்தயத்தில் நாம் வெற்றி பெற்று விடுகிறோம்! வேகமான போட்டி எதிலும் பெரிய வெளிநாடுகளின் பக்கத்திலே கூட போக முடியாமல்



பதக்கத்தை விட்டுக் கொடுத்து; அதில் பற்றற்றவர் என்பது போலச்சமாளித்துக் கொள்கிறோம்!

எல்லா வகையிலும் உலக நாடுகள், முன்னேறிக் கொண்டேயிருக்கின்றன! விஞ்ஞானப் புதுமைகள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செய்தியாக அந்த நாடுகளில் மலர்கின்றன! கோள்களில் குடியேறி மனிதன் கோலோச்சும் காலம் வந்தே தீருமென விஞ்ஞானி கொக்கரிக்கிறான்! அணுவையும் அசைத்து அற்புதங்கள் செய்கின்றனர் அங்கே! இங்கோ அவனன்றி அணுவும் அசையாது என்றுரைத்துத் தன்னம்பிக்கையைத் தகர்த்துக் கொண்டிருக்கிறோம்!

போர்களின் விளைவால் பொசுங்கிப் போன நந்தவனங்களாகி விட்ட நாடுகள்; இப்போது அனைத்து வளமும் பெற்ற அழகிய பூஞ்சோலைகளாகப் புன்னகை-புரிகின்றன! ஆனால் இங்கே புது யுகம் தோன்றிட எத்தனை யுகங்கள் தேவைப்படுமோ தெரியவில்லை! புது யுகத்தை, புரட்சி யுகத்தைப்படைத்திடும் ஆற்றல், அறிவு, செயல், சிந்தனை, துணிவு, கனிவு எல்லாம் உடையோர் இளைய தலைமுறையினர் என நம்புகிறேன்.

வெளி நாடுகளின் ஒளி பற்றிக் கூறுவதால், இங்கே எல்லாமே இருட்டில் கிடக்கிறது எனப் பொருள் கொள்ளத் தேவையில்லை. ''தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த கலப்பன்ன இருள், தன் கட்டுக் குலைந்தது'' எனப் பாடுவாரே பாவேந்தர் பாரதிதாசன்; அதற்கொப்ப இந்தத்

## பாவேந்தர் நூற்றாண்டு:



தமிழ் எங்கள் உயிர்என்ப தாலே - வெல்லும்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!
தமிழென்னில் எம்முயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ்குன்றுமேல் தமிழ் நாடெங்கும் இருளாம்!

திருநாட்டில் இருள் விலகப் போவதை அறிவித்து, ஒளி உதயமாகப் போவதை உரைத்திடும் கட்டியக்காரனாக வைகறை வெளுப்பு வந்து கொண்டிருக்கிறது. வெளிச்சத் திலும் உறங்கிக் கொண்டிருப்போர் துயில் களைய, திருப் பள்ளி எழுச்சி பாடிப் பயனில்லை. அவர்கள் துள்ளி யெழுந்திடத் துந்துபி முழக்கமாக இளையோர் குரல் எங்கணும் ஒலித்திடல் வேண்டும்.

தெருக்களில் பாருங்கள்; பிச்சையெடுக்கும் பட்டாளம் ஒரு புறம்! எச்சில் இலைகளுக்குப் போரிடும் படை வரிசை மற்றொரு புறம்! வேலை காலி இல்லை எனும் பலகையைச் சுட்டெரிக்க நெற்றிக்கண் இல்லையே எனத் துடிக்கும் கூட்டம் பிறிதொரு புறம்! இந்தக் கொடுமைகளை, கோஷங்கள் மட்டுமே அகற்றி விட இயலாது! கோட்டைகளிலிருந்து அறிவிக்கப்படும் சட்டங்களோ, திட்டங்களோ மாத்திரம் மாற்றி அமைத்துவிட முடியாது! அவற்றைச் செயல்படுத்தும் மனப்பான்மை, உறுதிப்பாடு, தூய்மை, வாய்மை அனைத்தும் தூங்காமை நிலையிலே - கற்ற கல்வியைத் துணிவுடன் பயன்படுத்திட மாணவ மணிகள் பயணம் மேற்கொண்டிட வேண்டும்! மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என நினைந்திடல் வேண்டும்!

உலகின் முன்னோடிகள் நாம்! எப்படி? குடியாட்சிக்கே இலக்கணம் வகுத்து, குடவோலை முறையைச் சொன்ன வர்கள் நம்மவர்! உத்திரமேரூர் செப்பேடுகள் தான் குடியாட்சிக்கு முதல் வித்திட்டது. முதன்முதல் கல்விக்கு இலக்கணம் வகுத்தவரே நாம் தான்.

''உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்று''

என்பது சங்க இலக்கிய வாக்கு. அறிவு தான் நாடுகளின் ஏற்றத்திற்குக் காரணம் என்ற இருபதாம் நூற்றாண்டின் கருத்தை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே சொன்னார் நம் திருவள்ளுவர். 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்ற தாரக மந்திரத்தை உலகுக்கு அளித்தவரே பொய்யாமொழி யார் தான்.

இன்று ஒரு கல்வி - ஒரே வழிக் கல்வியைத் தான் நாம் தருகிறோம். இதை மாற்றி, பலவழிக் கல்வி தர வேண்டு மென்கிறார்கள் இன்றையக் கல்வியாளர்கள். இதைத் தான் நம் பாரதி, 'பயிற்றுப்பல கல்வி தந்து பாரை உயர்த்திடல் வேண்டும்' என்றார்.

''கல்வி இருட்டிற்குக் கலங்கரை விளக்கு,
யாவர்க்கும் வாக்குரிமை இருக்கும் இந்நாட்டில்
யாவர்க்கும் கல்வி இருக்க வேண்டும்''

எனக் குடியாட்சியில் கல்வியின் நிலையை அடித்துரைத் தவர்தான் நம் பாவேந்தர்.

ஒரு முறை இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் கூறினார்.

"We have got the best of students and best of teachers but we produce the worst of results"

இது எப்படி? நம் மாணவர்கள் அருமையானவர்கள். நம் ஆசிரியர்கள் அற்புதமானவர்கள். ஆனால் நம் கல்வியின் விளைவோ பூஜ்யம். இதுதான் நம்முடைய இன்றைய கோளாறு. இதை எப்படிச் சீர்திருத்துவது? இந்த நோயை எப்படிக் குணப்படுத்துவது?

இதற்கு மேலைநாட்டார் ஒரு வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். 'அந்தந்த மாணவனுக்கு விருப்பமானதைக் கொடு' என்பதே அவர்கள் சித்தாந்தம். நாம் பழைய மெக்காலே முறையில் சில பாடங்களை முக்கியம் என நினைக்கிறோம். இன்று இசை, பரதநாட்டியம் இவற்றை எடுத்துக் கொண்டால், நாம் அவை பற்றி வானளாவ புகழ்கிறோமே தவிர இவற்றைப் பாடித் திட்டத்தின் முன்னணியில் வைக்கவில்லை.

அண்மையில் ஒரு அமெரிக்க சஞ்சிகையில் படித்தேன். அவர்கள் "Shoe Polishing" - என்ற தலைப்பில் "Ph.D" செய்கிறார்கள். விந்தையாக இருக்கிறதா? அதற்குக் கட்டுரையாளர் பதிலளிக்கிறார், 'காலணி பளபளப்பை ஒரு கலையாக அமெரிக்கர்கள் செய்கின்றனர். இது எப்படி? "Shoe Polishing" என்ற தொழில்துறை பல கோடிக்கணக்கான மூலதனங்களைக் கொண்டு இயங்குகின்றது. 'எப்படி சிமெண்டு துறையில் நாம், பட்ட மேற்படிப்பு மேற்கொள்ளலாமோ, அப்படித் தான் இதிலும்' என்கிறார். "Education for felt needs" - 'தேவைக்கேற்ற கல்வி' என்பதே அவர்கள் குறிக்கோள்.

இப்போது தெரிகிறதா அவர்கள் எப்படி வளருகிறார்கள் என்று? யார் யாருக்கு எது தேவையோ அது கொடுக்கப்படுகிறது. இதை "Cafeteria System of Education" என்பார்கள். நம்மைப் போல் எதையும், யார் மீதும், திணிப்பது கிடையாது. தேவையற்றது இங்கு திணிக்கப்படுகிறது. கல்வி, திணிக்கப்படும் விஷயமல்ல. அது தானாகவே மலர வேண்டியது, வளர வேண்டியது, அது மலர, வளர நாம் வாய்ப்புக்களை அளிக்கவேண்டும்.

வாழ்வின் பல துறைகளில், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவை என்று அண்மைக் காலம் வரை நாம் கருதியவை, இன்று நடைமுறை நிகழ்ச்சிகளாகி விட்டன. கனவுகளாக, கவிஞரின் கற்பனைகளாக நேற்றுவரை இருந்த பல, இன்று கண்முன் காட்சிகளாக நிற்கின்றன. மரணமிலாப் பெருவாழ்வு கூட மனிதனுக்கு இயலாததல்ல என்ற அளவிற்கு

**அஞ்சா நெஞ்சம் படைத்த இலட்சியவாதிகள்தான் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள். ஏனெனில் பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தூங்கும். ஆனால், இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டியில் வாழ்வர்.**

***—பேரறிஞர் அண்ணா***

அறிவுலகம் வளர்கிறது. இந்த நிலையில் நாம் நீண்ட உறக்கத்திலிருந்து கண் விழித்து, பகுத்தறிவுப் பயணத்தில் சேர வேண்டாமா என்று எண்ணிப் பார்த்துத் தான், ஊர்ந்தும் தவழ்ந்தும் பயணத்தைத் தொடருகிறோம்.

நமது இன்றைய வளர்ச்சிப் போக்கினை ஆராய்ந்தால் மேற்கு ஜெர்மனி ஓராண்டில் வெளியிடும் நூல்களை நாம் வெளியிட 45 ஆண்டுகளாகும் என்றும், அமெரிக்கா ஓராண்டில் வெளியிடும் நூல்களை நாம் வெளியிட 80 ஆண்டுகள் ஆகுமென்றும் கணக்கிட்டுள்ளனர். நாம் இந்த நிலையில் தான் தொடர்ந்து வளரப் போகிறோமா? என்பதை ஆழ்ந்து கருதிப் பார்க்க வேண்டும்.

புதிய சிந்தனைகளை ஊட்டுவது, புதுத் தகவல்களைத் திரட்டுவது, மகத்தான மாற்றங்களை மலர வைப்பது என்ற வழிகளில் கல்வியுலகம் புதிய வளர்ச்சியைப் போற்றி வருகிறது. கல்வியை ஓர் அணிகலனாகக் கருதிய காலம் பழங்காலமாகும். இன்றோ மனித வளத்தை மேம்படுத்தும் மாபெரும் கருவியாக, ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துச் செல்வங்களையும், வளங்களையும் வழங்க வல்ல பொருளாதாரத் தேவையாக, அள்ளக் குறையா நிறை செல்வமாகக் கல்வி மாறியுள்ளது. உலகின் எந்தப் பகுதியில் நடைபெறும் கல்வி வளர்ச்சியையும் உடனுக்குடன் எந்த நாட்டினரும் பெறவும், தத்தம் மொழிகளில் அவற்றை மாற்றிக் கொள்ளவும் விரைந்து முயல வேண்டிய தேவையும்

பெருகியுள்ளது. இம்மூன்று கூறுபாடுகளையும் உணர்ந்து நமது தாயகத்தின் கல்வி வளத்தை நாம் மேம்படுத்தி வருகிறோம். எளிய மக்களுக்கும், கல்வித் தெளிவு பெற்ற மக்களுக்கும் இடைவெளி பெருகுவது எப்போதும் நல்லதில்லை. எழுத்தறிவின்மை, எந்தப் பகுதியிலேனும் நாட்டில் இருந்து விட்டால் ஆயிரம் சிந்தனையாளர்கள் ஒருங்கே கூடி, புதுமையைப் புகுத்தினாலும் கூட பழமை தான் வென்று விடும். எனவேதான் நிலவொளியைப் போல் அறிவியல் திறமைகள் ஒளி வழங்காமல்- தெரு விளக்குப் போல - சிறு விளக்காக நமது நாட்டின் வளர்ச்சியில் ஓரளவுக்குத் தான் பங்கு பெறுகிறது. அறிவியல் மனப்பான்மை, அறிவியல் அணுகுமுறை, அறிவியல் உறுதிப்பாடு என்ற மூன்றும் நம் மக்களிடத்தில் போதிய எழுச்சியைப் பெறவில்லை. ஒரு பக்கத்தில் அறிவியல் வளர்ச்சியிருந்தாலுங்கூட, மூட நம்பிக்கையும், முறையற்ற பழக்க வழக்கமும் நம்மை விட்டு விலக முடியாமல் அவ்வப்போது தலை நீட்டுகின்றன. 'தொடுவுழி தொடுவுழி விலகுவதும் விடுவுழி விடுவுழி பாசி பற்றுவதும்' போல நமது நாட்டுச் சிந்தனைகளில் முழுமையான பகுத்தறிவு இடம் பெறாது போகிறது.

முயற்சிக்கு மூலதனமே, உள்ள உறுதிப்பாடுதான். உள்ளத்தின் உறுதி குலைந்தால், முயற்சி குலையும் என்பது உண்மை. ஓயாத முயற்சியும் - ஒடுங்காத உறுதிப்பாடும் - இரண்டு சிறகுகளாக அமையுமானால், நாம் எண்ணிய உயரத்தை எய்திட முடியும். 'நினைப்பதெல்லாம் நடக்காது'- 'நினைத்தது நடந்து விட்டால் ...' என்றெல்லாம் நமது மக்கள் ஐயப்பாட்டிலும் அச்சத்திலும் அமிழ்ந்து கிடக்கிறார்கள். எண்ணியது இயலும்; நினைப்பது நிகழும் என்ற நெஞ்சத் துணிவை - நம்பிக்கை உறுதியை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்ற நம்பிக்கையை ஊட்டும் திருக்குறள், 'எண்ணியதை மிக எளிதிலேயே பெறலாம்' என்னும் துணிவு தருகிறது. ''உள்ளியது எய்தல் எளிதுமன்'', என்பது குறள் மொழி.

இன்று பல்வேறு துறைகளில் தங்கப் பதக்கங்களும், பரிசுகளும் பெற்ற மாணவ, மாணவியரை வாழ்த்துகின்



அம்பேத்கர் நூற்றாண்டு:

**நாம் அடிமையாகப் பிறந்து விட்டோம் என்று உங்களுக்கு நீங்களே உறுதி செய்து கொண்டு விட்டீர்களானால், எந்த உரிமையையும் உங்களால் அடைய முடியாமலே போய்விடும்.**

றேன். இங்கு நடந்த ஒரு நிகழ்ச்சி என்னை வியப்பிலாழ்த்தியது. சுமார் ஐந்தாண்டுகட்கு முன்பு தொடங்கப் பெற்ற இப்பல்கலைக் கழகம், தனது முதல் டாக்டர் பட்டம் பெற்றவர்களை இன்று அறிமுகப்படுத்தியது. இந்தப் புதுவை பல்கலைக் கழக வரலாற்றிலேயே முதல் டாக்டர் பட்டம் பெற்ற மாணவர் (The First ever Ph.D.) பெயர் உதயசூரியன் - இதை ஆத்திகர்கள் தெய்வச் செயல் என்பார்கள். நான் இதை அப்படிச் சொல்ல விரும்பவில்லை. 'புதுவைக் கடற்கரையில் சூரியோதயம்' என்பேன். இது அரசியல் சூரியோதயம் அல்ல. 'அறிவுக் கதிரவனின் உதயம்' என்பேன்.

பல்கலைக் கழகப் பட்டத் தகுதியோடு பொது உலகுக்குத் தொண்டாற்ற வரும் உங்களை இருகரம் நீட்டி வரவேற்கிறேன். உங்கள் கல்விப் பயன் உலகுக்குச் சொந்தமாகட்டும்! அதனால் சமுதாய வாழ்வு வசந்தமாகட்டும்! பேரறிஞர் அண்ணா ஒரு பல்கலைக் கழகப் பேருரையில் குறிப்பிட்டது போல, அரசியல் கலையரங்கங்களில் - ஆட்சியியல் துறையில் - அரசியல் சார்ந்த செயற்களத்தில் நீவிர் ஆற்றிட வேண்டிய கடமை, பொறுப்பு குறித்து ஒன்றே ஒன்றினை மட்டும் சுட்டிக் காட்டுகின்றேன். நமக்கு வாய்த்துள்ள ஜனநாயக அரசு முறையை மெத்தவும் பத்திரமாகவும், சிறிதும் சேதமுறாமலும் பாதுகாப்பது உம்போன்ற பட்டதாரிகளின் முதல் பெரும் கடமையாகும். மக்களது அன்றாட வாழ்க்கைக்குள்ள தட்டுத் தடங்கல் அனைத்தையும் தகர்த்துப் பாதுகாப்பு அளித்திடும் என்ற நம்பகமான -






மாண்புமிகு தமிழக முதல்வர்-முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 27.8.90 அன்று புதுவையில் பாவேந்தர் பாரதிதாசனார் நூற்றாண்டு விழா தோரண வாயில்களுக்கு அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு புதுவை முதல்வர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்களும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு-புதுவை அமைச்சர் பெருமக்களும் இவ் விழாவில் கலந்து கொண்டார்கள்.

நம்பிக்கை தந்திடும் அரசு முறையான ஜனநாயகத்தை மிளிறச் செய்திடல் வேண்டும். அத்துடன் உமது பணி முற்றுப் பெறாது - பெற்றிடவும் கூடாது. சமுதாயத்தின் பேரங்கமாக - மிகப் பெரும்பாலோராக உள்ள சாமானியன் - சராசரி மனிதன். அந்தச் சாமானியனின் வாழ்வினை உயர்த்திடும் உன்னதமான பணிக்கு உங்களை அழைக் கிறேன்! அவனை மனித சமுதாயத்தின் கீழ்ப்படியிலேயே பின்தங்கவிட்டுத் தத்தளித்துத் தவித்திடச் செய்திடோம்!

அன்பின் வெளிச்சம் இருளைத் துடைக்கட்டும்!
அறிவுப் புது வெள்ளம் த்டையை உடைக்கட்டும்!

உங்கள் பேராற்றல் சரிதம் படைக்கட்டும்!
உலகுக்கு உங்கள் திறமை கிடைக்கட்டும்!

என்று உடன் பிறப்புக்களாகிய உங்களை வாழ்த்திப் பாராட்டி, இன்று நான் புதுவைப் பல்கலைக் கழகம் வந்த தன் நினைவாக, பேரறிஞர் அண்ணா பெயரில் ஆண்டு தோறும் செப்டம்பர் 15-இல் சொற்பொழிவு நிகழ்த்த அறக்கட்டளை நிதியாக, ஒரு இலட்ச ரூபாய் மானியமாக தமிழக அரசின் சார்பில் புதுவைப் பல்கலைக் கழகத்துக்கு அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து விடை பெறுகிறேன்.

வணக்கம்

TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## தொகுதி-1ல் (Group-I Services) அடங்கிய பதவிகளுக்கு முதன்மைத் தேர்வு (Main Written Examinations)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-1-இல் (Group-I Services) அடங்கிய பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு (Main Written Examination) கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாள் மற்றும் தேதிகளில் நடத்த தேர்வாணையம் முடிவு செய்துள்ளது.

| நாள் மற்றும் தேதி | நேரம் | தேர்வுத்தாள் |
|---|---|---|
| சனிக்கிழமை 6.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப. | முதல் தாள் (ஆங்கிலம்) |
| ஞாயிற்றுக் கிழமை 7.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப. | இரண்டாம் தாள் பொது அறிவு (முதல் பாகம்) |
| திங்கட் கிழமை 8.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப. | மூன்றாம் தாள் பொது அறிவு (இரண்டாம் பாகம்) |
| செவ்வாய் கிழமை 9.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப | நான்காம் தாள் (பிரிவு 1-ல் அடங்கிய விருப்பப் பாடங்கள் |
| புதன் கிழமை 10.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப. | ஐந்தாம் தாள் (பிரிவு 2-ல் உள்ள விருப்பப் பாடங்கள்) |
| வியாழக் கிழமை 11.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப. | ஆறாம் தாள் (பிரிவு 3-ல் உள்ள விருப்பப் பாடங்கள்) |

தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு (Hall Ticket) தேர்வுக்கான இடம், நேரம் முதலியவற்றை தேர்வுக்கு பத்து தினங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே அனுப்பப்படும். தேர்வு நாளுக்கு ஒரு வாரம் முன்னதாக தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு கிடைக்கப் பெறாதவர்கள் விண்ணப்பத்துடன் அனுப்பிய நிழற் படத்துடன் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

தேதி: 31.8.90

ஒம். / செயலாளர்

DIPR/2194/MS/90/ad.bureau/4005

# தந்தை பெரியாருடன் பெருமக்கள்



பேரறிஞர் அண்ணா அவர்களுடன்



பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடன்



மூதறிஞர் ராஜாஜி அவர்களுடன்



தொழில்மேதை ஜி.டி. நாயுடு அவர்களுடன்



ஈழத்தலைவர் செல்வநாயகம் அவர்களுடன்



ஜின்னா, அம்பேத்கார் ஆகியோருடன்

# பேரறிஞர் அண்ணாவுடன் பெருமக்கள்



மூதறிஞர் ராஜாஜியுடன்...



பெருந்தலைவர் காமராசருடன்...



ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடுடன்..



ஜி.டி.நாயுடு , கருமுத்து தியாகராசருடன்...



இந்தியக் குடியரசின், முன்னாள் தலைவர்
திரு. வி.வி.கிரியுடன்...



இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர்
திரு. ஜாகீர் உசேனுடன்...

TNPSC

விளம்பர எண்: 32/90

தமிழ்நாடு மின் ஆய்வாளர் பணியில், இளநிலை மின் ஆய்வாளர் பதவியில் (Junior Electrical Inspector) மூன்று காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 8.10.1990 அன்று மாலை 5.45 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,640-60-2,600-75-2,900.

(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்விற்கு பொருந்தாது).
மூன்று காலியிடங்களில் ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது.

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப் பெறாவிடில், அக்காலியிடம் ஆண் விண்ணப்பதாரரால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக. (சலுகைகள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளது).

**தகுதி:** A degree in Electrical Engineering.

**NOTE:** Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum qualifying marks for selection.

**EXPLANATION:** "Destitute widow" means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை"களில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.9.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.9.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) "கேட்புக் காசோலை" (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26×12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2195/MS/90/MCS

# பண்பாட்டுப் பெட்டகம்

டாக்டர் சூ. இன்னாசி
பேராசிரியர்-தலைவர்
கிறித்துவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்



இருளிலே ஒளிர்கின்ற விண்மீன்கள் எண்ணில் அடங்கா. அவற்றுள் விடிவெள்ளி எனச் சூட்டப்பெறும் விண்மீனுக்குத் தனிச் சிறப்புண்டு. இருள் மண்டிக் கிடந்த உலகிற்கு ஒளி வரப் போகிறது என்பதனை முன்னறிவிக்கும் அடையாளமாக அதனைக் கொண்டு, அவ்வொளியை எதிர்பார்க்கும் உணர்வைப் பெற்று உலகினர் செயல்படத் தொடங்குவர்.

விண்வெளியிலே மட்டுமன்றி இம் மண்வெளியிலும், அத்தகைய மீன் ஒன்று ஏறத்தாழ எண்பது ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றியது. அது மக்களது அகவிருள் போக்கி அறிவொளி தரும் விண்மீனாகச் சுடர்விட்டது; அச்சுடரொளி தான் பேரறிஞர் அண்ணா என்ற திருப்பெயர் தாங்கித் தமிழகத்திற்கு நம்பிக்கை ஊட்டியது; தமிழ் வளர்ச்சிக்கு ஊன்றுகோல் தந்தது; தமிழர்தம் வாழ்விற்கு உணர்வூட்டம் வழங்கியது.

## கவின் கோபுரம்:

தமிழகத்தின் பெருமைக்குச் சிறப்புச் சேர்ப்பனவாகக் காணுமிடமெல்லாம் தோன்றுகின்ற கவின் கோபுரங்களைக் காட்டுவர். கலை வண்ணங்களாலும், கட்டிட நுட்பங்களாலும் காண்போரை வியக்க வைக்கும் தன்மை கொண்ட அவை பாராட்டப்படுகிறதற்குரியனவே ஆயினும், அவை பன்னூற்றாண்டுகளாய் வீழ்ந்துபடா வண்ணம் தாங்கிக் கொண்டு வந்திருக்கின்ற அவற்றின் அடிப்படையை எண்ணிப்பார்ப்பார் இலர். ஒரு சில பொறியியல் வல்லுநர்கள்-கட்டிடக்கலை விற்பன்னர்கள் மட்டுமே சிந்தித்திருப்பர்.

பேரறிஞர் அண்ணாவும் போற்றப் படுவதற்குரிய சீரிய கோபுரமே. அக் கோபுரத்தை வியப்பவர்கள் அவர்தம் சீர்திருத்த உணர்வென்னும் செங்கல், அவற்றின் இடையே பொதிந்துள்ள தமிழ்ப்பற்று என்னும் சாந்து, அவற்றின் மேற்பூச்சாக அமைந்துள்ள அவர்தம் எழுத்தாற்றல், பேச்சுவன்மை, அவற்றின் உச்சிக்கலசமாக ஒளிர்கின்ற அவர் வகித்த முதல்வர் பதவி ஆகியவற்றைக் கொண்டு பாராட்டிப் பெருமைப்படுவர்.

ஆனால் அவையனைத்துக்கும் மேலாக அவற்றைத் தாங்கி வருகின்ற அடிப்படை போல அமைந்து அவரோடு உணர்வொன்றிக் கலந்திருந்த பண்பாடு என்பதே பெரிதும் போற்றற்குரியது.

கட்டிடத்தின் அடிப்படைக்கல் , மண்ணில் மறைந்து கிடப்பது; மற்றவர்க்கு எளிதில் தெரியாதது. மற்றவைபோல வண்ணம் தீட்டப் பெறாதது. அவ்வாறே எழுத்து, பேச்சு, நிருவாகத் திறன் எல்லாம் யாவரும் எளிதில் உணர்ந்து போற்றும் தன்மையது. ஆனால் பண்பாடு அரிதிற்கண்டு பாராட்டப்படும் தன்மையாயினும் என்றும் நிலை பேற்றுக்கு உரியதாகும்.

பெட்டகம் என்பது பணத்தைப் பாதுகாக்கப் பயன்படுவது; வீட்டினுள் தனியறையில் மற்றவர் பார்வையில் படாமல் வைக்கப்படுவது. துணிகளைப் பாதுகாக்கப் பயன்தரும் பீரோக்களை விட, உருவில் சிறியது எனினும் உறுதியானது. தேவையான சமயத்தில் தேவையான அளவில் எடுத்துத் தேவைப்படுவோருக்கு வழங்கும்பொழுது மட்டும் திறக்கப்படுவதாகும். பேரறிஞர் அண்ணா அவர்களும் பண்பாடு என்னும் பொன்னணிகளைப் பூட்டி வைக்கும் பெட்டகமாகத் திகழ்ந்தார். தேவையான நேரத்தில் பெட்டகத்தினின்று பண்பாட்டு அணிகலன்கள் வெளிப்படும். அதனைப் பெற்றுக் கொள்வோர் அவர்தம் உள்ளக் கிடக்கையை வியந்து போற்றித் தமது நன்றியினைப் புலப்படுத்துவர். ஆதலின் பேரறிஞர் அண்ணா ஒரு பண்பாட்டுப் பெட்டகமாகவே திகழ்ந்தார்.

## மனிதப்பண்பாடு:

மனிதனை மனிதனாக மதிக்கும் உள்ளுணர்வு எழுந்தால் அதுவே சிறந்ததொரு பண்பாடாக மதிக்கப் பெறும். தற்கால உலகில் அஃது அருகிப் போய்

விட்டது என்பது தெளிவாகும். பேரறிஞர் அண்ணாவிடத்தில் அப்பண்பு எப்பொழுதும் குடி கொண்டிருந்தது. தம்மோடு தொடர்பு கொண்டோரிடத்து மட்டுமல்லாமல் தொடர்பற்ற ஏழை எளிய மக்களையும் தம்மைப்போல் மதிக்கும் தன்மையுடையவராகத் திகழ்ந்தார். அதன் காரணமாக மனிதரை வைத்து மனிதரே இழுத்துச் செல்லும் ரிக்ஷாவில் செல்வதில்லை என்ற எண்ணம் கொண்டு செயல்பட்டு மனிதப் பண்பாட்டின் சிகரமாகத் திகழ்ந்தார்.

மற்றவரை நேரடியாக வருத்துகின்ற செயலில் ஈடபடாதிருப்பது மனிதப் பண்பாடு.

அவ்வாறின்றி, மற்றவர் படும் துன்பங்களைக் கண்டிரங்கி அவற்றைத் துடைத்தெறிய முற்படுவது மனிதாபிமானப் பண்பாடு; அவ்வகையில் பேரறிஞர் அண்ணாவின் பணிகள் பற்பல.

அவற்றுள் கலையுலகப் பேரரசர்களாகத் திகழ்ந்த எம்.கே. தியாகராஜபாகவதரும், என்.எஸ்.கிருஷ்ணனும் சிறையினின்று விடுதலை பெற எண்ணியது குறிப்பிடத்தக்கது. விடுதலைக்குப் பின்னும், பொருளாதார நிலையில் மேம்படுவதற்குக் கலைவாணருக்கு 'நல்ல தம்பி' என்னும் திரைப்படக்கதை உரையாடலை எழுதிக் கொடுத்த தகைமையும் அத்தகையதே. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு நிதி சேர்த்து வழங்கியநிகழ்ச்சியும் மனிதாபிமான அடிப்படையில் எழுந்ததே.

### சமுதாயப் பண்பாடு:

சமுதாயத்திற்குப் பயன் தரும் வகையில் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டு வீண் பெருமைகளை உதறித் தள்ளுகின்ற உணர்வினைச் சமுதாயப் பண்பாடாகக் கருதலாம். சேலம் நீதிக் கட்சி மாநாட்டில் அவர்தம் முயற்சியில் கொண்டு வரப்பட்ட திராவிட கழகம் என்னும் பெயர் மாற்றம், வகித்து வரும் பதவிகளை விடுதல், சாதிப் பெயரை நீக்குதல், பட்டங்களைத் துறத்தல் முதலியவை பற்றிய தீர்மானங்கள் எல்லாம் சமுதாயப் பண்பாட்டு உந்துதல்களின் விளைவே எனலாம்.

நாட்டின் அன்றாடப் பயனை மட்டும் கருத்திற் கொள்ளாது என்றும் பயன் தரவல்லனவற்றைச் சிந்தித்துச் செயல்படும் உணர்வே நாட்டியற் பண்பாடு எனக் கொள்ளப் பெறும். அவ்வகைப் பண்பாட்டில் பேரறிஞர் அண்ணா என்றும் நிலை நின்றார்.

தமிழக முதல்வர் பதவி ஏற்றபின் அமெரிக்காவின் ஏல் பல்கலைக்கழகம் அவரைச் சிறப்பு விருந்தினராக அழைத்துப் பாராட்டியது. அப்பொழுது அமெரிக்கப் பத்திரிகையாளர், சூழ்நிலையை- அஃதாவது நடுவணரசில் இருக்கும் பிரதமர் இந்திரா காந்தி- காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவர், தமிழகத்தை ஆளும் கட்சியோடு கருத்து முரண்பாடுகளைக் கொண்டவர் என்பதை- மனத்திருத்தி இந்திரா காந்தி பற்றிக் கருத்துக் கூறுமாறு கேட்டனர். உடனே பேரறிஞர் அண்ணா தற்பொழுதுள்ள நிலையில் அவர் மிகவும் பொருத்தமான திறமைசாலி எனப் பதிலளித்து நம் நாட்டியற் பண்பாட்டைக் கட்டிக் காத்தார்.

தற்காலத்தில் இதழ்களை நடத்துவோர் எவ்வகையினராயினும், எக்கட்சியினராயினும் விளம்பரங்களை நம்பி, வியாபார நோக்கிலேயே நடத்துகின்றனர். அதனால் வேற்றுமொழிச் சொற்கள், தொடர்கள் முதலியவற்றையும், விரசமான படங்கள், செய்திகள் முதலியவற்றையும் விரவாமல் தடுக்க அவரால் இயலவில்லை. இவற்றினின்று முற்றிலும் விடுபட்டுக் கொள்கை ஒன்றையே நெஞ்சில் நிறுத்தி, விளம்பரமோ, தனி அட்டையோ எதுவுமின்றித் தம் 'திராவிட நாடு' இதழை நடத்திக் காட்டி இதழ்ப்பண்பாட்டைச் செயல்படுத்தியவர் பேரறிஞர் அண்ணா.

### தெய்வீகப்பண்பாடு:

முன்னர்க் கண்டனவெல்லாம் மனித நிலையிலே பேணப்பட வேண்டிய பண்பாடுகள். தெய்வீக நிலையிலே கருதப்பட்ட சிலர் அவற்றினும் மேம்பட்டுத் திகழ்ந்துள்ளனர். இயேசுபிரான் சிலுவையில் தொங்கி உயிர்விடும் நேரத்தில் அவர்தம் தொண்டை வறட்சியை நீக்குவதாய் எண்ணி அவரைச் சிலுவையில் அறைந்தவர்களிலேயே ஒருவன் காடியில் தோய்த்த குச்சியை அவரிடம் நீட்டினான். அத்தகைய எண்ணம் கூட எழாத சிலரிடத்தும் அன்பு காட்டித் தாமும் தெய்வீகப் பண்பாட்டின் சின்னம் என்பதனை மெய்ப்பித்தவர் பேரறிஞர் அண்ணா.

கல்லூரி மாணவர்கட்கும், போக்குவரத்துத் தொழிலாளர்க்கும் மோதல் ஏற்பட்டு மாணவர்கள் தாக்கப்பட்டனர். அதனால் மாணவர்கள் பொங்கி எழுந்தனர். அவர்களை அமைதிப்படுத்தும் முயற்சியாக ஒரு கூட்டத்தில் உரையாற்றினார். இடையே அவருக்குத் தொண்டை வறட்சி ஏற்படுகிறது. ஒருவர் தண்ணீர் கொடுக்க முற்படுகிறார். அதனைத் தடுக்கின்றனர் வேறுசில மாணவர்கள். இதனை அறிந்தும் பேரறிஞர் அண்ணா முகத்தைச் சுளிக்கவில்லை. மாறாகப் பொறுமையின் சிகரமாக அமைந்து அவர்களைத் தம் வயப்படுத்தித் தெய்வீகப் பண்பாட்டில் உயர்ந்து தோன்றினார்.

இவ்வாறு மனிதப் பண்பாட்டின் காவலராக, மனிதாபிமானப் பண்பாட்டின் செம்மலாக, சமுதாயப் பண்பாட்டின் மாமணியாக, நாட்டியற் பண்பாட்டின் மாமலையாக இதழ்ப்பண்பாட்டின் ஒளிக் கதிராக, தெய்வீகப் பண்பாட்டின் கொடுமுடியாக வாழ்ந்தார் பேரறிஞர் அண்ணா.

## அடுத்த இதழில்...

**மின்சக்தி—தேவை-நிருவாகம்: சில கருத்துரைகள்!**

திரு. எம். சிவஞானம் இ.ஆ.ப.( ஓய்வு )
உறுப்பினர்,
மாநிலத் திட்டக்குழு -

**மாபெரும் மனிதாபிமானப் பிரச்னை!**

செ. ராம்தாஸ் இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர்

**சிறுநீரக நோயியல் பிரிவின் சிறப்பான சேவை!**

டாக்டர் முத்து சேதுபதி
(தலைவர்-சிறுநீரக நோயியல் துறை,
பொது மருத்துவமனை - சென்னை-
பேட்டிக் கட்டுரை)





# மகளிர் முன்னேற்றமும் தமிழக அரசும்

"பெண்கள் மிகுந்த திறமையும், அறிவாற்றலும், தன்னம்பிக்கையும் கொள்ள வேண்டும்; இதற்காகவே, ஏறத்தாழ 75 ஆண்டுக் காலமாகப் பெண்கள் கல்வியறிவு பெறவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது.

நம்முடைய நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 50 சதவிகிதத்திற்கு மேல் பெண்கள் இருக்கிறார்கள்; ஆனால் பல்வேறு துறைகளிலும் பெண்கள் முன்னேறவில்லை. ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம், பெண்கள் முன்னேற்றத்தைப் பொறுத்தே அமையும் என்று அனைத்து நாட்டு அறிஞர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

மகளிர் முன்னேற வேண்டும் என்று - மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா... எல்லோரும் குரல் கொடுத்தார்கள்; சிலபல சட்டத் திருத்தங்களும் செய்யப்பட்டன. ஆனால்- இன்னும் நாமெல்லாம் அவைகளைச் சரியாக-முறையாகப் பின்பற்றினோமில்லை.

**பெண்கள் முன்னேற்றத்திற்கு ஆண்கள் தடை என்கிற வாதத்திற்கே இப்போது இடமில்லை; பெண்களுக்கான உரிமைகள் அளிக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் என்று இன்றுள்ள அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் பாடுபட்டு வருவதை-பாதை அமைத்துத் தருவதை நீங்கள் அறிவீர்கள்.**

**பெண்கள் முன்னேறப் பெண்களே தடையாக இருப்பதை, நாள் தோறும் வெளிவருகின்ற பத்திரிகைச் செய்திகள் நமக்குத் தெரிவிக்கின்றன. வரதட்சணை போன்ற கொடுமைகளின் பின்னணியில் யார் இருக்கிறார்கள்? பிறந்த குடும்பத்திற்கும், படித்த படிப்பிற்கும் ஏற்ப வரதட்சணை உயருகிறதென்றால், இதற்கெல்லாம் பெண்களல்லாமல், வேறு யார் காரணமாக இருக்கிறார்கள்? பெண்கள் உணரவேண்டும் என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேனேயல்லாமல், மட்டம் தட்டுவதற்காக அல்ல.**

கணவனைக் கவனித்தல், குழந்தைகளைப் பராமரித்தல், குடும்பத்தை நிர்வகித்தல் போன்ற சுமைகளைப் பெண்களோடு ஆண்களும் சேர்ந்து ஏற்கும் நிலை உருவாக வேண்டும்; இன்றைய இளம் தலைமுறையினர், இதற்குப் பாடுபட வேண்டும். சமையல், குடும்ப நிர்வாகம் ஆகியவற்றைப் பார்ப்பது கேவலம் அல்ல என்பதை- ஆண்கள் உணரச் செய்வதே பெண்களின் தலையாய கடமையாக இருக்க வேண்டும்.

ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்ற நிலை- வீட்டில் மட்டுமல்ல; வெளியிலும் கூடாது. 'சார்க்' அமைப்பு, இந்த ஆண்டைப் பெண் குழந்தைகள் ஆண்டாக அறிவித்திருக்கிறது.

**பெண் கல்விக்குத் தமிழ்நாடு அரசு மிகுந்த தன்னம்பிக்கையோடு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்திருக்கிறார். மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில்- சில இடங்களில், பிறக்கிற குழந்தை பெண்ணாக இருந்தால் அதைக் கொன்றுவிடும் கொடுமை நடப்பதாக அறிந்து- மதுரையிலும், ஆண்டிப்பட்டியிலும் இரண்டு அனாதை இல்லங்களை அமைத்து, "பெண் குழந்தையைப் பெறுவோர், அதைப் பேணி வளர்க்க விரும்பாவிட்டால் அங்கே கொண்டுவந்து விட்டு விடலாம்" என்று இன்றைய அரசு அறிவித்திருக்கிறது. அதுமட்டுமல்ல; நடக்கவிருக்கும் மாநகராட்சித் தேர்தலில், 46 வட்டங்கள், பெண் வேட்பாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன.**

**பெண்கள் பொது நிர்வாகத்தில் அதிக அளவில் பங்கேற்றால்தான் அரசியலே தூய்மையடையும் என்று புரட்சிக் கவிஞரே தெரிவித்திருக்கிறார். அதை நிறைவேற்றும் வகையிலேயே தமிழக அரசு இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி வருகிறது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், டாக்டர் முத்து லட்சுமிரெட்டி, ஈ.வெ.ரா. நாகம்மையார், டாக்டர் தர்மாம்பாள், அன்னை அஞ்சுகத்தம்மையார் போன்ற புகழ்மிக்க பெண்மணிகளின் பெயர்களிலெல்லாம் அரிய திட்டங்கள் பல அமல்படுத்தப்பட்டு வருகின்றன.**

எந்தப் பதவி கிடைத்தாலும் சரி; அந்தப் பதவிக்கு ஏற்றபடி நம்மை நாமே ஆக்கிக் கொள்ள வேண்டும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற நிர்வாகப் பொறுப்புகளை ஏற்கப் பெண்கள் தயங்கக்கூடாது. சமுதாயத்திற்குப் பணியாற்ற வேண்டும் என்ற நல்லுணர்வோடு பொதுப் பணியாற்றவும் பெண்கள் ஆர்வத்தோடு முன்வரும் நிலை வரவேண்டும்."

-மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்

**திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்**

(22.8.90 அன்று, சென்னை-இராணிமேரி கல்லூரி பொன் விழாக் கலையரங்கில் கல்லூரி முதல்வர் தலைமையில், காலை-மாலை நேரக் கல்லூரி மாணவியர் பேரவையைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து.)

**TNPSC**

விளம்பர எண்: 31/90

தமிழ்நாடு மருத்துவப்பணியில் கதிர்வீச்சு பௌதிகத்தில் (Radiology Physics) உதவிப் பேராசிரியர் பதவியில் இரண்டு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய **ஆதிதிராவிடர்/ பழங்குடி வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும்** 8.10.1990 அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.2,200-75-2,800-100-4,000.

(இந்த இரண்டு காலியிடங்களும் முன் தெரிவில் நிரப்பப்படாத காலியிடங்களாகும். ஆதிதிராவிடர்/ பழங்குடி வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட இந்த காலி இடங்களை நிரப்ப இது மூன்றாவது முயற்சியாகும்).

**வயது:** வயது வரம்பு இல்லை.

**தகுதி:** A degree of M.Sc. (Medical Physics) obtained after undergoing studies at the College of Engineering, Guindy belonging to the Anna University, Madras and duly declared eligible for appointment as Radiological Safety Officers in the Medical Institutions by the Division of Radiological Protection of the Bhabha Atomic Research Centre, Bombay.

**or**

A degree of M.Sc. (Physics) and a Diploma in Radiology Physics awarded by the Bombay University after undergoing one year Post Graduate Course in Hospital Physics and Radiology Physics conducted by the Division of Radiology Protection of the Bhabha Atomic Research Centre.

**NOTE:** Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum marks for selection.

**EXPLANATION:** "Destitute widow" means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பைச் சார்ந்த தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர் போன்றவர்களுக்கு தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்" தரப்பட்டுள்ளன.

விண்ணப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரி **இலவசமாக** பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு இருக்க வேண்டும். அத்துடன் சுயவிலாசம் எழுதிய உறையும் (26×12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

டிஐபிஆர்/2189/எம்எஸ்/90/அக்கார்ட்

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி. நவீன பட்டு வகைகள்




100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

